இதழ் 353
23 ஆகஸ்ட் 2025
18 பக்கங்கள்

# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1



# கையில் விலங்கு மாட்டப்பட்டு வெலிக்கடை சிறையில் ரணில்



# வட, கிழக்கில் அரைநாள் ஹர்த்தால்





## வெற்றி, தோல்விகளுக்கு அப்பாலானதொரு பார்வை

விதுரன்



# ஒரு மரணம் ஒரு சோகம், ஒரு மில்லியன் இறப்புகள் ஒரு புள்ளிவிவரம்

வேல்ஸில் இருந்து அருஸ்



© 2025 இலக்கு இணையம்

## பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் வர்த்தமானி அடுத்த மாதம் வெளியிடப்படும் : அரசாங்கம்




தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த மாத ஆரம்பத் தில் வெளியிடப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் முன்வைத்த, வடக்கு கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை விடுத்த கோரிக்கைக்கு அமைய, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைபாட்டில் அரசாங்கம் இல்லை என்றும் தங்களின் கொள்கை பிரகடனத்திலேயே இந்த நிலைப்பாட்டை அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழு பல சந்தர்ப்பங்களில் கூட்டங்களை நடத்தியுள்ளது.

இதன்படி, புதிய சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கான திருத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த செயற்பாட்டை இந்த மாத இறுதிக் குள் நிறைவு செய்து, எதிர்வரும் செப் டெம்பர் மாத ஆரம்பத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனக் குழுக்களை இலக்கு வைத்து தற்போது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஐ.சி.சி நீதிபதிகள் மீது அமெரிக்கா தடை




இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய முயன்ற அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கறிஞர்களை வாஷிங்டன் குறிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜூலை 2025 இல் ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் தலைமையகம். அமெரிக்க வீரர்கள் மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகளுக்கு எதிரான வழக்குகளைத் தொடர்ந் ததற் காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) இரண்டு நீதிபதிகள் மற்றும் இரண்டு வழக்கறிஞர்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை(20) அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க துருப்புக்களின் நடத்தை குறித்து ஹேக்கை தள

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## மூன்று வருட போரில் 17 இலட்சம் உக்ரைன் படையினர் பலி



ரஷ்யாவுடனான 3 ஆண்டு கால மோதலில் “பல தலைமுறைகளை” இழந்ததாக உக்ரைன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார். கசிந்த இராணுவ கோப்புகள் 2022 முதல் கியேவின் படைகள் 1.7 மில்லியனுக்கும் அதிகமான துருப்புக்களை இழந்துள்ளன என கசிந்த இராணுவ ஆவணங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

17 இலட்சம் படையினர் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளனர் என்பதைக் அந்த ஆணவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த அறிக்கைகளைத் தொடர்ந்து உக்ரைன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் டெம் டிமிட்ரக்கின் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## பாகுபாடின்றி சட்டம் சமமாக அமுல்படுத்தப்படும்!



சமகால அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதால் பதவியைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சமமாக சட்டத்தை செயற்படுத்தும் என்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.


பாராளுமன்றத்தில் நேற்று 22) உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்படி, பொலிஸ் மா அதிபரா?, பிரதி பொலிஸ் மா அதிபரா? முன்னாள் ஜனாதிபதியா? என பதவிகளை பார்க்காது, எவருக்கும் எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எவரேனும் தவறு செய்திருந்தால், அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தத் தயங்க போவதில்லை என்றும் அமைச்சர் ஆனந்த விஜேயபால குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாகவும், அது தொடர்பான பல தகவல்கள் தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்காவுக்கு எதிராக இணைந்து செயல்பட இந்தியாவும் சீனாவும் முடிவு



அரிய மண் பொருட்கள், உரங்கள் மற்றும் சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்கள் உள்ளிட்ட முக்கிய பொருளாதார கட்டுப்பாடுகளைத் தீர்க்க முயற்சிப்பதாக சீனா இந்தியாவிடம் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செவ்வாய்க்கிழமை(19) செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான பேச்சுவார்த்தையின் போது சீன வெளியுறவு அமைச்சர் வாங்யி இந்த உறுதிமொழியை அளித்ததாக எ.என்.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்திய அரசாங்கத்தில் உள்ள ஆர்.டி. வட்டாரங்களும் இந்த முன்னேற்றத்தை உறுதிப்படுத்தியுள்ளன. மூன்று ஏற்றுமதி பிரிவுகள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## தமிழரின் தாகம் தமிழீழம்தான்: ரவிகரன் பா.உ தெரிவிப்பு



தமிழ்மக்கள் தமிழீழத்தை அடைவதற்கே விரும்புகின்றனர். தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகவே சமஷ்டியை கோருகின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று(22.) பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசியமக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்லத் தம்பி திலகநாதன் தமிழ்மக்கள் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கோரவில்லை என குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இந்நிலையில் அதனைத் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதனின் இக்கருத்தைக் கண்டித்ததுடன், மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

## இறால்களை உண்ண வேண்டாம் என அமெரிக்கா எச்சரிக்கை



அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA), ஒரு குறிப்பிட்ட பிராண்ட் உறைந்த பச்சை இறாலை (frozen raw shrimp) சாப்பிடவோ, விற்கவோ அல்லது பரிமாறவோ கூடாது என்று நுகர்வோரை வலியுறுத்தியுள்ளது, அதில் ஆபத்தான கதிரியக்க இரசாயனப் பொருட்கள் இருக்கலாம் என்று எச்சரித்துள்ளது.

இந்தோனேசிய நிறுவனமான PT. பஹாரி மக்மூர் செஜாட்டி (BMS Foods) என்ற நிறுவனத்தில் இருந்து அமெரிக்காவிற்கு ஒரு கப்பலில் இறக்குமதி செய்யப்பட்டு டெக்சாஸ், புளோரிடா மற்றும் பென்சில்வேனியா உள்ளிட்ட 13 மாநிலங்களில் வால்மார்ட்டின் கிரேட் வேல்யூ லேபிளின் கீழ் விநியோகிக்கப்பட்ட இறால்களில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகஸ்ட் 26 வரை விளக்கமறியலில்



வெளிநாட்டுப் பயணத்தின் போது அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று மதியம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

ரணில் மீது 386 மற்றும் 388 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டது, இது குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் பொது சொத்துக்களை தவறாகப் பயன் படுத்துதல்,பிணையில் வெளிவர முடியாத குற்றங்கள் ஆகியவை அடங்கும்.!

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக அவர் திணைக்களத்திற்கு அழைக்கப் பட்டபோது இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கைது செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும். ரணில் விக்ரம சிங்க நேற்று பிற்பகல் 03.00 மணியளவில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது பதவிக் காலத்தில், 2023 செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவின் நியூயோர்க்கிற்குச் சென்றிருந்தார்.

இப்பயணத்தை முடித்து நாட்டிற்குத் திரும்பு வதற்கு முன்பு, முன்னாள் ஜனாதிபதி தனது மனைவி மைத்ரி விக்ரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருந்தார்.

இங்கிலாந்தின் வோல்வர்ஹாம்டன் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜான்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ஜநாவை சமாளிக்க அநுர அரசின் அறிவிப்பு.!

**பா.அரியநேத்திரன்**



பயங்கரவாதத் தடைச்சட்டம் எதிர்வரும் 2025 செப்டம்பர் மாதம் ஆரம்பத்தில் இரத்து செய்யப் படும் என வெளியுறவு அமைச்சர் விஜய் ஹேரத் நேற்று 22ம் திகதி அறிவித்துள்ளார்.

இது வரவேற்கத்தக்க செய்தி. எதிர்வரும் செப்டம்பர்08ம் திகதி ஜெனிவாவில் ஐநா மனித உரிமை ஆணைக்குழுவின் 60வது கூட்டத்தொடர் அமர்வில் அன்று இலங்கை தொடர்பான பிரேரணை முன்வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி இருந்தாலும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# இறைமையும் தன்னாட்சியுமுள்ள ஈழத்தமிழர்களின் நீதிக்கான கூப்பாடு (Cry) பலமடைய வேண்டிய வாரம்

இவ்வாரம் 2025 செப்டெம்பர் 8ம் நாளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60வது ஆண்டுக் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளதை மையமாக வைத்து அனைத்துலக செயற்பாடுகளை நெறிப்படுத்தும் வாரமாக அமையும். அந்த வகையில் இந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 60வது கூட்டத் தொடரில் இஸ்ரேலின் பலஸ்தீன மக்கள் மேலான இனஅழிப்பு, நோக்கிலான போர், ரஸ்யாவின் உக்ரைன் மக்கள் மேலான நிலஆக்கிரமிப்புடன் கூடிய போர் மற்றும் ஈரானை அணுவாயுத நாடாக மாறாது தடுக்கும் அமெரிக்காவின் வான்வெளி ஆக்கிரமிப்புப் போர், பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு முயற்சிகளுக்கு எதிரான இந்தியாவின் எதிர்ப்புப் போரில் அமெரிக்காவின் நிலை போன்ற அனைத்துலக சமகாலப் பிரச்சினைகளில் பலவற்றினதும் மனித உரிமைகள் பாதிப்பு விளைவுகளே முதலிடம் பெறுவது தவிர்க்க இயலாதவொன்றாக அமையும்.

இவற்றுக்கிடையில் ஈழத்தமிழர்களின் மனித உரிமை பிரச்சினை சிறிலங்காவின் உள்ளகப் பொறிமுறைகளின் வழி தீர்க்கப்படுவதற்கு அனைத்துலக நிதி மதி உதவிகளை வழங்குதல் என்ற நோக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் போக்காக மாறுவதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தெளிவாகத் தொடங்கி விட்டது. இந்த நடைமுறை எதார்த்தத்திற்கு ஈழத்தமிழர்கள் எவ்வாறு இரு வாரத்துள் எதிர்வினை செய்யப் போகிறார்கள் என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது. உலகளாவிய நிலையில் உலக மக்களின் கவனத்தை, ஈழத்தமிழர்கள் தங்களுக்கான நீதியைப் பெற வைக்க கூப்பாடு வைப்பதன் வழியாக மட்டுமே எதிர் வினை செய்ய முடியும் என்பது இலக்கின் இக்கேள்விக்கான விடையாக அமைகிறது.

இதற்கு ஈழத்தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்? ஈழத்தமிழர்கள் தாங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் இலங்கைத் தீவில், தங்களின் யாராலும் என்றும் பிரிக்க இயலாத இந்த இறைமையின் அடிப்படையிலான, அடிப்படை மனித உரிமையான தன்னாட்சி உரிமையினை முன்னிறுத்தி, நீதிக்கான கூப்பாட்டினை (Cry) பலமாக எழுப்ப வேண்டும். ஈழத்தமிழர்களின் தாயகத்தில் இருந்து எழும் இந்த நீதிக்கான கூப்பாட்டை உலக இனமாக உலகெங்கும் வாழும் புலம்பெயர் ஈழத்தமிழர்களும், தொப்புள் கொடி இன உறவாக உள்ள தமிழகத் தமிழர்களும், இணைத்து உலக மயப்படுத்த வேண்டும். இந்த ஈழத்தமிழர்களினதும் தமிழகத் தமிழர்களினதும் இனத்துவ ஒருமைப்பாட்டுடன் கூடிய நீதிக்கான கூப்பாடே அனைத்துலக மக்களதும் ஈழத்தமிழர்களின் நீதிக்கான கூப்பாட்டுக்கான ஆதரவுத் தூண்டலாக அமைந்து அதன் துலங்கலாக ஈழத்தமிழர்களுக்கான அனைத்துலக நீதியைப் பெற்றுத் தரும் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது.

இன்று ஈழத்தமிழர்கள் அரசியல்வாதிகள், கட்சிகள், அமைப்புக்கள், இயக்கங்கள், சிவில் சமூகத்தினர் என்ற ஐங்குழுத்தாக்கத்தினைக் கொண்டவர்களாக உள்ளனர். ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் சிறிலங்காவின் இறைமைக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் எதிராக எதனையும் சொல்லவோ செய்யவோ முடியாதவாறு சிறிலங்காவின் அரசியலமைப்புச் சட்டத்தின் 6ம் திருத்தத்தின் வழி தடுக்கப்பட்டவர்களாகவே கடந்த 43 ஆண்டுகளாக தங்கள் நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர் பொறுப்புக்களை செய்து வருகின்றனர். இதனால் இவர்களால் ஈழத்தமிழர்களின் நீதிக்கான கூப்பாட்டினை வெளிப்படுத்த இயலாது. ஈழத்தமிழர்களின் கட்சிகளைப் பொறுத்தவரை கட்சித் தலைவர்கள் தங்கள் கட்சி உறுப்பினர் மேலான கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதையே தலைமைப் பணியாகக் கருதிச் செயற்பட்டு வருகின்றனர். ஈழத்தமிழரின் அமைப்புக்களைப் பொறுத்த மட்டில் தங்கள் தங்கள் அமைப்புக்களுக்கான பொருள் பலம் மனிதப்பலம் என்பவற்றினை வளர்ப்பதனையே தலைமைப்பண்பாகக் கருதிச் செயற்பட்டு வருகின்றனர்.

ஈழத்தமிழரின் இயக்கங்களைப் பொறுத்தவரை பல்குழு பாழ்செய்யும் உட்பகை இவற்றின் வழி பிளவுண்டு போகும் தலைமைப்பண்பையே வெளிப்படுத்துகின்றன. இந்நிலையில் சிவில் சமூகங்களின் வழியாகவே ஈழத்தமிழர்களின் நீதிக்கான கூப்பாடு முன்னெடுக்கப்பட வேண்டிய அரசியல் எதார்த்த நிலை காணப்படுகிறது. ஆனால் சிவில் சமூகங்கள் மாணவர், ஆசிரியர், தொழிலாளர்கள், ஊரில் மக்களுடைய நாளாந்த வாழ்வுக்குத் துணையாக இருப்பவர்கள், யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மக்களின் உட்கட்டுமானமாக உள்ள கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் காணப்படும் ஆன்மிகத் தலைமைகள், என்ற ஈழத்தமிழரின் சமூக அடித்தளத் தவர்களின் பங்களிப்பு இல்லாத மேற்குலக அல்லது இந்திய அல்லது சீன மேலாண்மைகளுடன் தங்களை இணைத்துக் கொண்ட பிணைத்துக் கொண்ட முகவர்களின் வழியானதாகவே செயல்நிலை பெறுகின்றன என்பது வரலாறாக உள்ளது.

இதற்கு நேர்மாறாகச் சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்வாதிகள், கட்சிகள், அமைப்புக்கள், இயக்கங்கள், சிவில் சமூகங்கள் என்பன எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா மாணவர்- ஆசிரியர், தொழிலாளர், நாட்டு வைத்தியர், பிக்குகள் வழியான ஐங்குழு சிவில் சமூகத்தை உருவாக்கியது முதல் இன்று வரை இந்த அடித்தளத்தன்மையில் உறுதியாக நின்று கொண்டே தங்களின் அனைத்துலக பிராந்திய வெளிவிவகாரத் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவே சிங்கள பௌத்த பேரினவாதம் எந்த அரசியல்தலைமையும் தாங்கள் சிங்களவர்களுக்கு பௌத்தத்துக்கு பணியாற்றவே ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ளதாக துணிந்து அனைத்துலக பிராந்திய வல்லாண்மைகளுக்கு பதிலளித்து ஈழத்தமிழின அழிப்பை, ஈழத்தமிழினத்துடைப்பை, ஈழத்தமிழினப் பண்பாட்டு அழிப்பை தமது அரசியல் கொள்கை கோட்பாடாகவே படைபலத்துணையுடன் முன்னெடுத்து வரும் வரலாறாக உள்ளது.

இதனால் சிங்கள தேச நிர்மாணத்தினை உறுதியானதாகக் கருதும் அனைத்துலக வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் சிறிலங்காவின் ஈழத்தமிழர்களுக்கு எதிரான அனைத்து அனைத்துலக சட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகளையும் அதன் உள்நாட்டுப் பிரச்சினை என்ற வடிவில் ஏற்றுச் சிறிலங்காவின் அரசு மேலும் உறுதி பெறத் தாம் உதவித் தங்களின் சந்தை மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு இலங்கைத் தீவின் இருப்பையும் வளத்தையும் சிறிலங்காவுடன் இணைந்து பகிர்ந்து கொள்வதினையே தமது தலைமைப்பண்பாக வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கான இந்த மாத உதாரணம்தான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் 2025ம் ஆண்டு செப்டெம்பர் மாத 60வது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான அறிக்கையின் முதன்நிலை அறிக்கை. அதில் விதந்துரைக்கப்பட்டவற்றைச் சிறிலங்கா எந்த அளவுக்கு ஏற்று எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறது என்பதைச் சிறிலங்கா அதற்கான பதிலினை அளித்த பின்னர் ஆராய்ந்து அதற்கேற்ப 60வது அனைத்துலக மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா குறித்த அறிக்கையைத் தாக்கல் செய்யவுள்ளது.

இந்நிலையில் அரசியல், கட்சி, அமைப்பு, இயக்க, சமூக வேறுபாடுகளைக் கடந்து "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற உண்மையை உறுதிப்படுத்தி அதில் அடிப்படை மனித உரிமையான தன்னாட்சி உரிமையினை பயன்படுத்தி நாங்கள் வாழ்வதற்கான அனைத்துலகச் சட்ட முறைமைகளை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி கையொப்பங்கள் இட்ட மனுக்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையருக்கு அனுப்புதலை முதற்பணியாகவும், தொடர்ந்து அனைத்துலக ஊடகங்களில் உண்மைக்கு அப்பால் உள்ள ஈழத்தமிழர் குறித்த தரவுகள் தகவல்களை சரியானதாக மீள் உற்பத்தி செய்வதற்கு தனியாகவும் கூட்டாகவும் உழைப்பதின் வழி உலக கருத்தியலில் ஈழத்தமிழர் குறித்த உண்மையை மீள் உற்பத்தி செய்ய வேண்டியது அடுத்த பணி. 14 நாட்களைக் கால எல்லையாகக் கொண்டு இவற்றை வேகமாகச் செய்ய இலக்கு அழைக்கிறது

**ஆசிரியர்**

# வட, கிழக்கில் அரைநாள் ஹர்த்தால்






## வெற்றி, தோல்விகளுக்கு அப்பாலானதொரு பார்வை

விதுரன்

இலங்கை தமிழரசுக் கட்சியால் கடந்தவாரம், முத்தையன்கட்டு இராணுவ முகாம் சம்பவத்தை எதிர்த்து பூரண ஹர்த்தால், முதலில் ஆகஸ்ட்; 15ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, பின்னர் 18ஆம் திகதிக்கு மாற்றப் பட்டு இறுதியில் 'அரைநாள் ஹர்த்தாலாக' அறிவிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

அரைநாள் ஹர்த்தால் வெற்றி பெற்றதா இல்லையா என்பது தொடர்பில் பல்வேறுவிதமான ஆய்வுகளும், அதற்கான ஆதாரங்களும் அறிவிப்பை விடுத்த சுமந்திரன் அணியாலும், அதற்கு எதிராகவுள்ள தரப்புக்களாலும் வெளியிடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்தப் பத்தியில் ஹர்த்தால் வெற்றியா தோல்வியா, என்பதற்கு அப்பால் காய்தல், உவலத்தலின்றி சில விடயங் களை ஆழமாக அவதானிக்க வேண்டியது அவசியமாகின்றது.

### தவறான ஆரம்பம்

முத்தையன் கட்டு இராணுவ முகாமிற்குச் சென்று காணாமலாகியிருந்த இளைஞனின் சடலம் 24மணிநேரத்தின் பின்னர் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை காலை குளத்திலிருந்து மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப் பட்டிருந்தது.



பிரேதபரிசோதனைகளின் முடிவுகள் என்ன? நடந்தது என்ன? என்ற எந்தவிதமான அடிப்படை ஆராய்வுகளுமின்றி, ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கேயும், பதில் பொதுச் செயலாளர் சுமந்திரனும் இணைந்து 'நீதி நிலைநாட்டக்கோரி' கடித மொன்றை 9ஆம் திகதி நண்பகலுக்குப் பின்னர் அனுப்பி வைத்தனர்.

இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அதனை ஊடகங்களுக்கு தெரியப்படுத்துவதற்காக கொழும்பு தயா வீதியில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் அவசரமாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டு அது முகநூல் நேரலையிலும் ஒளிப்பரப் பட்டது.



குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதிக்கான கடித விடயத்தினை வெளிப் படுத்திவிட்டு அதன் மையப்பகுதியில், வட, கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கான அழைப்பினை விடுத்திருந்தார்.

அந்த அழைப்பின் பிரகாரம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமையே ஹர்த்தால் அறிவிக்கப் பட்டது.

இந்தக் ஹர்த்தால் அறிவிப்பு தொடர்பில் சுமந்திரன் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனோ, சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுடனோ, வர்த்தக, தொழிற்சங்கங்களுடனோ கலந்துரையாடவில்லை.

ஏனென்றால், படையினருக்கு எதிரான விடயம் என்பதால் தனது அறிவிப்பின் பின்னால் அனைவரும் இயல்பாக அணி திரள்வார்கள் என்ற தற்துணிவு அவருக்கு இருந்தது.

அதுமட்டுமன்றி, குறித்த ஹர்த்தால் தினம் வெள்ளிக்கிழமை என்பதால் சகோதர முஸ்லிம்களும் அன்று நண்பகல் தொழுகைக்கு பின்னர் பெரிதும் வர்த்தக நிலையங்களை மூடிவிடுவார்கள் என்பதால் 'வட,கிழக்கு' முழுமையாக முடங்கும் என்ற நப்பாசை அவருக்கு மேலிட்டிருந்தது.

ஆனால், குறித்த காலப்பகுதியில், நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவம் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மறுபக்கத்தில் மடுதாதாவின் வருடாந்த திருவிழாவின் இறுதி நாளும் அன்றாக இருந்தது.

தாயகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இருவேறு முக்கிய நிகழ்வுகள் பற்றி அவர் கிஞ்சித்தும்சிந்தித்திருக்கவில்லை. மன்னார்மாவட்டத்துக்குச் சென்ற அவர் காற்றாலை வாகனங்களை பெருநிலப்பரப்பிற்குள் கொண்டு செல்வதற்கு தடையாக போராட்டகாரர்கள் நின்றமை தொடர்பிலான வழக்கில் முன்னிலையாகினார்.



அதன்பின்னர், மன்னார் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசத்தினை சந்திப்பதற்கு தொலைபேசி அழைப்பெடுத்தார். குருமுதல்வர் தமிழ் நேசன் அடிகளால் தொலைபேசியை எடுத்து பதிலளித்தவாறு ஆயருக்கு அருகில் சென்றபோது யார் என்று வினவிய ஆயர் ஞனப்பிரகாசம் 'அழுக்கு நிறைந்த அரசியல்வாதிகளுடன் உரை யாட விரும்பவில்லை' என்றொரு வார்த்தை உதிர்த்தார். தொலைபேசியில் மறுபக்கத்தில் ஆயருடன் உரையாட காத்திருந்த சுமந்திரனுக்கு இந்தக் கூற்று மிகத்தெளிவாக விளங்கியிருக்கும். அதனைத் தொடர்ந்து குருமுதல்வரும் நிலைமைகளை எடுத்துரைத்தார். அது மேலதிக விளக்கங்களை அவருக்கு வழங்கியிருக்கும்.

அதனடிப்படையில் தான், பூரண ஹர்த்தாலை 18ஆம் திகதி திங்கட்கிழமை மாற்றினார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

வட, கிழக்கில்... தொடர்ச்சி ...

திங்கட்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்குரிய நாளொன்று அல்ல என்பதை உணரும் அளவிற்கு சுமந்திரனின் சாணக்கியம் காணப்படவில்லை.

ஏனென்றால், ஹர்த்தால் அறிவித்தல் பற்றிய விமர்சனங்களும், ஏனைய கட்சிகளின் அமைதியும், வர்த்தக சம்மேளனத்தினரின் எதிர்ப்பும், தமிழரசுக்கட்சிக்குள்ளேயே காணப்பட்ட சலசலப்புக்களும் சுமந்திரனுக்கு தான் எடுத்த காரியத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற சிந்தனையை மட்டும் தான் தோற்றுவித்திருந்தன.



இதனால் அதற்கான அம்புகளாக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை பயன்படுத்த முனைந்தார். தமிழரசுக்கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப் பாட்டுக்குள் காணப்படும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்.

அந்த அழுத்தங்களால் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஒவ்வொரும் களத்தில் இறங்கினார்கள். வர்த்தகர்களுடன் கடுமையாக நடந்து கொண்டார்கள். ஊடக சந்திப்புக்களை நடத்தினார்கள். தங்களுடைய 'சேர்' ஐ திருப்திப்படுத்தவே முனைந்தனர். கள யதார்த்தத்தினை அவர்கள் எடுத்துரைக்கவில்லை.

எவ்வாறாயினும் இத்தகைய அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிராக ஏற்பட்ட சமூகத்தின் பிரதிபலிப்புக்களால் ஹர்த்தாலை முழுநாள் நடத்துவது சாத்தியமில்லை என்பதை சுமந்திரனுக்கு உணர்த்தியது. அதனால் ஹர்த்தால் அரைநாளாக அறிவிக்கப்பட்டது.

### வரலாற்றில் கரும்புள்ளி

இலங்கைத் தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரையில் அதனுடைய 76 வருட வரலாற்றில் இந்த ஹர்த்தால் அழிக்கப்பட முடியாதவொரு மிகப்பெரும் கரும்புள்ளியாகும்.

கடந்த காலங்களில், ஒரே நாளில் அறிவிக்கப்பட்டு, மிக வெற்றிகரமாக நடத்தப்பட்ட போராட்டங்கள் பல உள்ளன. ஆனால், முத்தையன்கட்டு சம்பவம் நடந்து பத்து நாட்களுக்குப் பிறகு முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலொன்றை அக்கட்சியால் வெற்றி பெறச் செய்திருக்க முடிந்திருக்கவில்லை.

அக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் ஸ்.ஜே.வி. செல்வநாயகம் வரலாற்றில் பல தியாகங்களின் மூலம் போராட்டங்களை முன்னெடுத்தவர். அவர் ஜனநாயகப் போராட்டங்களை வெகுஜனங்களின் திரட்சியாக காண்பித்தவர். வட,கிழக்கை முடக்கி அரசாங்கத்தினை ஆட்டம் காணவைத்தவர். உலகத்தை திரும்பிப் பார்க்கச் செய்தவர்.

அத்தகைய பாரம்பரியத்திலிருந்துவந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியால் ஜனநாயக ரீதியில் போராடுவதற்காக தமிழர் தேசத்தினை திரட்சியடையச் செய்திருக்க முடியவில்லை. ஒவ்வொரு தமிழ் மகனினது ஆதரவினைப் பெற்றிருக்க முடிந்திருக்கவில்லை.

வட, கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தமிழரசுக்கட்சிக்கே ஆணை வழங்குகின்றார்கள். உள்ளூராட்சி மன்றங்கள் முதல் பாராளுமன்றம் வரையில் அதிகமான அரசியல் பிரதிநிதித்துவங்களை வழங்குகின்றார்கள்.

தற்போதைக்கு வட,கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்ற கட்சி தமிழரசுக்கட்சி தான். இதனால் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற மார்பு தட்டும் போக்கு காணப்படுகின்றது.

ஆனால் நிலைமைகள் தலைகீழாக இருக்கின்றது. தமிழரசுக் கட்சி, தன்னை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக நினைத்து, தன்னிச்சையாக முடிவெடுத்தது. அதிகாரத்தை மேலிருந்து கீழ் நோக்கிச் செலுத்துதற்கு மாறாக அனைத்து தரப்புக்களையும் அரவணைத்துச் செல்வது தான் ஒரு சிறந்த அரசியல் தலைமை. அவ்விதமான தலைமைத்துவம் தமிழரசுக்கட்சியிடம் காணப்படவில்லை.

கடந்த காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தகமையுடன்இருப்பதற்காக, பலதியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் செய்தார்கள். அவர்களின் தலைமைத்துவமும், அவர்கள் கொடுத்த விலையும் மிக அதிகம்.

ஆனால், தமிழரசுக் கட்சி அத்தகைய தியாகங்களைச் செய்த கட்சியல்ல. குறிப்பாக தற்போதிருக்கின்ற அக்கட்சியின் தலைமைகள் போராட்டங்களின்போது ஒருதுளி வியர்வையை கூடச் சிந்தியிருக்குமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அதுமட்டுமன்றி, வட,கிழக்கு மக்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கு தேர்தலில் பெருவாரியாக வாக்களித்தார்கள், எதிர்காலத்தில் வாக்களிப்பார்கள் என்பது உண்மை தான். ஆனால், அது கட்சி மீதான பற்றினால் மட்டும் அல்ல, அந்த எண்ணத்துக்கு பல காரணிகள் உள்ளன. அந்த வாக்குகளை வைத்துக் கொண்டு, தாங்கள் நினைத்ததை மக்களின் மீது திணிக்க முயற்சிப்பது சரியான அணுகுமுறை அல்ல.

அதேபோன்று தான் தலைமைக்கட்சியாக இருந்தால் பொதுவிடயங்களில் அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஏனைய கட்சிகளை அரவணைப்பதற்கான முதிர்ச்சியான பக்குவம் காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனைய கட்சிகளுடன் குறைந்தபட்சம் உரையாடல் நடத்துவதற்கு கூட தமிழரசுக்கட்சி தயாராக இருந்திருக்கவில்லை.

அதுமட்டுமன்றி, அரசியலுக்கு எப்போதுமே ஆதரவுச் சக்திகளாக இருக்கும் மதத்த லைவர்கள், வர்த்தகத் துறையினர் உள்ளிட்டவர்களை கட்சி அரவணைத்திருந்தால் போராட்டத்துக்கான அறைகூவல் நாலாபக்கத்திலிருந்தும் வெளியாகி அழுத்தங்களை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் அவ்விதமாக எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

### சுமந்திரனுக்கு எதிரான மனநிலை

இந்தக் ஹர்த்தால் தோல்விக்கு முக்கிய காரணங்களில் அடுத்ததாக இருப்பது, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிரான தமிழர் தாயகத்தில் காணப்படுகின்ற 'எதிர்மறை மனோநிலை'. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை எதிர்த்தவர் சுமந்திரன். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தினை ஏற்றுக்கொள்ளாதவர். இதற்கும் அப்பால் அவர் மீது பல விமர்சனங்கள் உள்ளன. இவை அனைத்துமே சமூக மயப்படுத்தப்பட்டு விட்டன.

ஆனால் அவருக்கு அந்தப் புரிதல் காணப்படவில்லை. அவர் தமிழரசுக் கட்சிதான் வட,கிழக்கு தமிழ் மக்களின் முகம்' என்று காண்பிப்பதற்கே முனைகிறார். 'மக்கள் எங்களுக்கே வாக்களித்தார்கள், நாங்களே முடிவுகளை எடுப்போம்' என்ற அவரது அணுகுமுறையில், ஏதேச் சதிகாரமே வெளிப்படுகிறது. இது மக்கள் களத்தில் எடுபடவில்லை.

கட்சிக்குள் இருக்கும் பலரும், அவரது முடிவுகளுக்கு தலையாட்டும் பொம்மைகளாக மாறியிருக்கிறார்கள். ஆனால், தமிழ் மக்கள் அவ்வாறு தலையாட்டிகளாக இருப்பதற்கு விரும்பவில்லை என்பதை இந்த ஹர்த்தால் போராட்டம் நிரூபித்திருக்கிறது.

இதன் விளைவாக, அவர் எதிர்காலத்தில் முன்வைக்கும் எந்தவொரு போராட்டமும் மட்டுமல்ல கருத்தியலும் தான் மக்கள் ஆதரவை முழுமையாகப் பெறுவதில் சிக்கல்களைச் சந்திக்கும். அந்த வகையில் அவருடைய முதல மைச்சர் கனவுக்கு இதுவொரு எச்சரிக்கை மணியை ஒலித்திருக்கிறது. அது முதலமைச்சர் தொடர்பில் கட்சி தீர்மானிப்பதற்கு நல்லதொரு சமிக்ஞையாக கொள்ள முடியும்.

### தனிமனிதனுக்கு அப்பாலான சிந்தனை

சுமந்திரன் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தார். அவர் முற்கூட்டி உரையாவில்லை. முதலமைச்சர் கனவுக்கான பரீட்சையாக பார்க்கிறார் போன்ற விமர்சனங்களை ஒருபுறமொதுக்கி விட்டு, தமிழர்கள் தேசமாக திரள்வதற்காக ஒற்றுமை அவசியமானது என்ற நிலைப்பாட்டில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதனுடன் இணைந்துள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தங்களுடைய நகர்வுகளைச் செய்திருக்கலாம்.

தமிழரசுக்கட்சிக்கு மட்டும் மக்கள் ஆணை வழங்கவில்லை. அனைவருக்கும் வழங்கியுள்ளார்கள். அதனால் தான் யாருக்கும் பெரும்பான்மை இல்லை என்று கூறுகின்ற இந்தத் தரப்பினர், சுமந்திரனின் அறிவிப்பை அடுத்து அதுபற்றி உரையாடுவதற்கு தயாராக இருக்கின்றோம் என்ற அறிவிப்பையாவது விட்டிருக்கலாம்.

முத்தையன் கட்டில் உயிரிழந்த இளைஞனின் சகோதரி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர். அந்தவகையில் அக்கட்சிக்கு குறித்த மரணத்துக்கு எதிராக போராடுவதில் அதிகமான பிடிமானம் உள்ளது.

எனினும், இளைஞனின் தனிப்பட்ட விடயங்களை ஆராய்ந்து அந்தக் கட்சி போராட்ட களத்தில் இறங்குவதற்கு தயங்கியது. எனினும், வட,கிழக்கு படைகுறைப்பு, முகாம்கள் அகற்றல் என்று ஹர்த்தாலுக்கான தொனிப்பொருள் மாறிய தன் பின்னர் அக்கட்சி தனது நிலைப்பாட்டினை மாற்றியிருக்க வேண்டும்.




அதுமட்டுமன்றி, முத்தையன்கட்டு சம்பவத் துக்கு அப்பால், வட, கிழக்கில் படை குறைப்பு, செம்மணி மனிதப்புதைகுழி, பொறுப்புக் கூறல் உள்ளிட்ட பல விடயங்களையும் உள்ளடக்கியதாக போராட்டத்தினை வலுவாக்க உரமூட்டியிருக்கலாம். அடுத்து நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடருக்கும் தமிழ்த் தேசம் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கும். அது காத்திரமானதாக இருந்திருக்கும்.

ஆனால் அரசியல் கட்சிகளும் சுமந்திரனின் அழைப்பு தோல்வி அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தான் இருந்தன. ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த நபரைப் பார்த்தார்களே தவிர, ஹர்த்தால் தோல்வி கண்டால் ஏற்படப்போகும் விளைவுகளைப் பற்றி சிந்தித்திருக்கவில்லை.

அரசியல்கட்சிகள் மட்டுமல்ல, சிவில் அமைப்புக்களும், மதத்தலைவர்களும், புத்திஜீவிகளும் கூட அமைதியாகவே இருந்தார்கள். சுமந்திரன் என்ற தனிநபரையே அனைவரும் இலக்கு

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

வட, கிழக்கில்... தொடர்ச்சி ...

வைத்தனர். சுமந்திரன் அழைத்தால் 'இராப்போசன விருந்துபசாரத்துக்கு' செல்லும் புத்திஜீவிகளால் சுமந்திரனுடன் இவ்விடயம் சம்பந்தமாக உரையாட முடியாது போனதேன்.

சுமந்திரன் அறிவித்த ஹர்த்தாலை தோல்வியடைச்செய்வதற்கு சிந்தித்ததை விடவும், அப்போராட்டத்தில் பங்காளர்களாக மாறியிருக்கலாம். ஆனால் அவ்வாறு எந்தவொரு தரப்பினரும் சிந்தித்திருக்கவில்லை.

ஹர்த்தாலின் வெற்றிக்கு, மக்கள் அனைவரும் ஒரே மனநிலையில் திரண்டு நிற்பது அவசியம். வட, கிழக்கில் படைக்குறைப்பு, முகாம்கள் அகற்றல் என்பது நீண்டகாலமாக மக்கள் முன்வைத்துவரும் ஒரு கோரிக்கை. வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்ட படைகள் மக்களின் மீதான அடக்குமுறைகளுக்குக் காரணமாக இருக்கின்றன.

அவ்வாறான நிலையில் ஹர்த்தாலில் ஏற்பட்ட பிசுபிசுப்பு தமிழரசுக் கட்சியின் தோல்வியாக மட்டும் பார்க்கப்படவில்லை. தமிழர்கள் தங்கள் கைகளாலேயே தங்கள் கண்களை குத்திக்கொண்டுள்ளனர் என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது.



எதிர்காலத்தில் தமிழரசுக்கட்சி தவிர்ந்த எந்தவொரு தரப்பினராலும் ஹர்த்தால் மற்றும் போராட்டங்களுக்கான அழைப்புக்கள் விடுக்கப்படுகின்றபோது தமிழரசுக் கட்சி தள்ளியே நிற்க முற்படும். ஒருவேளை அக்கட்சி பெருந்தன்மையாக ஆதரவளிப்பது போன்று காண்பித்தாலும், கூடவிருந்தே காலைவாரும் திரைமறைவு நடவடிக்கைகள் தீவிரமாக இருக்கும்.

### முஸ்லிம்களின் ஆதரவு

சுமந்திரன் ஹர்தாலுக்கான அழைப்பை விடுத்த போது முஸ்லிம்களும் ஆதரவளிக்க வேண்டும் என்றார். அவருக்கு துணையாக சாணக்கியனும் அந்தக்கோரிக்கையை கிழக்கில் முன்வைத்தார். ஆனால் முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் தலைவருடன் உரையாடவில்லை.

அதன்பொதுச்செயலாளர் நிசாம் காரியப்பரிடம் தான் சுமந்திரன் உரையாடினார். அவர் 'நட்புக்காக' இறுதி நாளில் ஒரு விசேட ஊடக அறிக்கையை வெளியிட்டார். அதற்கு அப்பால் அக்கட்சி களத்தில் இறங்கிச் செயற்பட்டிருக்கவில்லை.

கட்சியின் தலைவர் ஹக்கீம் உள்நாட்டில் கூட இருந்திருக்கவில்லை. அதேநேரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் துடன் உரையாடிய போது, அவர் பலஸ்தீன விடயத்தினையும் ஒரு கோரிக்கையாக உள்ளீர்த்துக்கொள்ளுங்கள் என்று கோரியுள்ளார்.

அதற்கு சுமந்திரன் தரப்பில் முறையான பதிலளிக்கப்படவில்லை. அதனால் ரிஷாத் அமைதியாக இருந்துவிட்டார். அதாவுல்லாவுடன் உரையாடலே நடத்தப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் உரையாடி இருந்தால் கிழக்கில் அக்கட்சிக்கு ஆதரவுள்ள முஸ்லிம் பகுதிகளில் நிலைமையை சாதகமாக்கி இருக்கலாம். ஆனால் அவ்விதமான எந்தச் செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

### அநுர அரசின் எதிர்ப்பு

இதேவேளை, ஹர்த்தால் அறிவிப்பு விடுக்கப்பட்டவுடனேயே அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் எதிர்ப்புக்களை வெளியிட ஆரம்பித்திருந்தது.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த எந்தவொரு அரசாங்கமும் படைக்குறைப்பு கோரிக்கையை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொண்டதில்லை. நல்லாட்சிஅரசாங்கம்படைக்குறைப்புக்கு அல்லது படை விலக்கத்துக்கு இணங்கிய போதும், அதைச் சரியாக முன்னெடுக்கவில்லை.



சில இடங்களில் இருந்து படையினர் குறைக்கப்பட்டு, இன்னொரு இடத்தில் குவிக்கப்பட்டார்கள். இப்போதும் கூட, இராணுவத்தின் பெரும்பாலான படைப்பிரிவுகள் வடக்கு, கிழக்கிலேயே நிலை கொண்டிருக்கின்றன. ஆனால் கடந்த காலத்தில்ஹர்த்தாலையோபோராட்டங்களையோ அப்போதைய அரசாங்கம் பொருட்டாக கொண்டாக இல்லை.

ஆனால் அநுர அரசாங்கம் ஹர்த்தாலை தடுக்க விரும்பியது. அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர்கள், இராணுவ மற்றும் பொலிஸ் பேச்சாளர்கள் என்று அரசாங்கத்தின் அனைத்து மட்டத்திலும் இந்தப் போராட்டம் அவசியம் இல்லையென வலியுறுத்தப்பட்டது.

இராணுவத் தரப்பு நியாயமாக நடந்து கொள்வதாகவும், விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதாக வும் ஒரு விம்பம் கட்டியெழுப்பப்பட்டது. அதேசமயம், இச்சம்பவத்திற்கும் இராணுவத்திற்கும் தொடர்பு இல்லை என்ற மறுப்பும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இவ்வாறான சம்பவங்கள் இனரீதியாக இடம்பெறவில்லை என்றும், நாட்டின் பிற மாவட்டங்களிலும் இடம்பெறுகின்றன என்றும் அரசாங்கம் ஒரு நியாயத்தை முன்வைத்தது. இதன் மூலம், அரச படைகளின் அத்துமீறல்களை ஒரு சாதாரண விடயமாக அடையாளப்படுத்த முயற்சித்தது.

அதுமட்டுமன்றி குறித்த ஹர்த்தாலை தோற்றுப்போன தமிழ் அரசியல்வாதிகளின் அரசியல் நலனுக்கான போராட்டமாக, இனப்பதற்றத்தைத் தூண்டுவதற்கான போராட்டமாக அரசாங்கம் அடையாளப்படுத்த முற்பட்டது.

இனவாதம் இல்லாத ஆட்சியை நடத்துவதாகக் கூறிக்கொண்ட அரசாங்கம், தானே இனவாதத்தை கையில் எடுத்து தமிழர்களை துரும்புச்சீட்டாக பயன்படுத்தி அதனைத் திணிக்க முயன்றது. ஒட்டுமொத்த அரசாங்கக்கட்டமைப்பும் இந்த ஹர்தாலை விரும்பவில்லை, அதனை தோற்கடிக்கவே விரும்பின.

அதற்கு காரணங்கள் இல்லாமலில்லை. அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. அந்தப் பிரேரணையில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய விடயங்கள் இடம்பெறுவதை தவிர்ப்பதற்கு அல்லது தடுப்பதற்கு இத்தகைய ஹர்த்தால் உள்ளிட்ட மக்கள் போராட்டங்கள் நடக்காமல் இருப்பது முக்கியம்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமை கள் உயர்ஸ்தானிகர் முன்வைத்திருந்த அறிக்கையில், (பல பலவீனங்கள் உள்ள) தண்டனை விலக்கு நிலையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

தண்டனை விலக்கு என்பது, இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வரும் புற்றுநோயைப் போன்றது. எந்தவொரு அரசாங்கத்திடமும், தண்டனை விலக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அரசியல் இயலுமை இருந்ததில்லை. தற்போதைய அரசாங்கத்திடமும் அது இல்லை. தண்டனை விலக்கை முடிவுக்குக் கொண்டு வர முயன்றால், அது தங்களுக்குத் தாங்களே ஆபத்தாக அமைந்துவிடுமோ என்று ஆளும் தரப்பினர் அஞ்சுகிறார்கள்.

அதனால் தான் இலங்கையின் எந்த வொரு அரசாங்கமும் தண்டனை விலக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தயங்குகிறது. ஜெனிவாவில் கொடுக்கப்படும் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமானால், இத்தகைய சம்பவங்கள் நடக்கவில்லையென நிரூபிக்க வேண்டும்.

ஆனால், தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்கள், புதிய அரசாங்கம் நியாயமாகச் செயற்படுகிறது என்று நிரூபிப்பதற்குத் தடையாக இருக்கின்றன. இதனால்தான், முத்தையன்கட்டு சம்பவம்தொடர்பாகஉடனடியாகவிசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், அதற்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை.

அதுமட்டுமன்றி, ஹர்த்தால் முழுமையாக வெற்றிபெற்றால் வடக்கு,கிழக்கில் அரசாங்கத்துக்கு எதிரான மனோநிலை இருக்கிறது என்ற கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தி விடுமோ என்று அநுரதரப்புக்கு அச்சம் ஏற்பட்டது. எனவேதான், ஒட்டுமொத்த அரசாங்கக் கட்டமைப்பையும் பயன்படுத்தி ஹர்த்தாலை தோல்வியடையச் செய்வதற்கான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இத்தகைய மனோநிலை அரசாங்கத்திடம் இருந்தது என்பதை உணர்ந்து கொண்டு, தமிழரசுக் கட்சி இப்போராட்டத்தை இன்னமும் வீரியமானதாக முன்னெடுத்திருக்க வேண்டும். அது நடைபெற்றிருக்கவில்லை.

இந்தப்புரிதல் ஏனைய அரசியல் கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றுக்காவது ஏற்பட்டு ஒத்துழைப்புக்களை முன்னெடுத்திருக்க வேண்டும். அது நடைபெற்றிருக்கவில்லை.



அரசியல்தரப்புக்களின் முரண்பாடுகளுக்கு அப்பால் சிவில் அமைப்பினரும், மதத்தலைவர்களும், புத்திஜீவிகளும் மேற்படி விடயத்தினை உய்த்தறிந்து கட்சிகளை ஒருங்கிணைத்து, அனைத்துத் தரப்பு ஆதரவினையும் பெற்றி ருக்க வேண்டும். ஆனால் அதுவும் நடைபெற்றிருக்கவில்லை.

இப்போது நிலைமை, சுமந்திரனும், தமிழரசுக்கட்சி என்பதை தாண்டி ஒட்டுமொத்த தமிழர்தாயகமும் வெட்கித்தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது..

ஏனென்றால், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு தமிழர் தாயகம் ஆதரவளிக்கவில்லை. தமிழர் தாயகம் அரசாங்கத்துடன் தான் இருக்கின்றது. இது தான் அநுர அரசு ஜெனீவா மட்டுமல்ல உலகத்துக்கே சொல்லப்போகும் செய்தி.

இப்போதாவது சோசலிசம், மார்க்சியத்தின் சாணக்கியத்தை தமிழ்த் தேசியம் புரிந்து கொண்டால் தேவலை.

• • •

# தாயகத்தில் இனி சாத்தியப்படாத 'கதவடைப்பு' போராட்டம்..!



**பா. அரியநேத்திரன்**

"ஹர்த்தால்" என்பது குசராத்தி மொழி தமிழில் "கதவடைப்பு" என்றே கூறப்படும். கடைகள், பொது அலுவலகங்கள், பாடசாலைகள், போக்குவரத்து போன்ற அனைத்து அன்றாட நடவடிக்கை அம்சங்களும் முடக்கப்பட்டு அமைதி பேணுதல் என்பது இதன் பொருள்.

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டவடிவங்கள்1949டிசம்பர்18ல்இலங்கைத் தமிழரசுக் கட்சி தந்தை செல்வா ஆரம்பித்த பின்னர் அகிம்சை ரீதியான போராட்டங்களை இணைந்து வடக்கு–கிழக்கில் சுயநிர்ணய உரிமை வேண்டி 1976 மே 14 தமிழர் விடுதலை கூட்டணியை ஆரம்பித்து வட்டுக்கோட்டையில் சுதந்திர தமிழீழத்திற்கான தீர்மானம் நிறைவேற்றும் வரை இலங்கைத் தமிழரசுக் கட்சியால் அகிம்சை போராட்ட வடிவங்கள் பல்வேறு விதமாக முன்னெடுக்கப்பட்டன.



அதில் சத்தியாக்கிரகப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், கதவடைப்பு போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம், தபால் தலை முத்திரைப் போராட்டம், ஸ்ரீ எதிர்ப்பு போராட்டம், பேரணி போராட்டம், நிர்வாக முடக்கல் போராட்டம் என "போராட்டமே வாழ்க்கை" என்ற நிலையில் விடுதலைக்காக அறவழிப் போராட்டங்கள் பல்வேறு இடங்களில் வித்தியாசமான முறையில் நடந்த வரலாறுகள் ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

அகிம்சை ரீதியான போராட்டங்களால் எந்த பலனும் இல்லை என்பதால் 1976க்கு முன்னர் 1972 காலப்பகுதி தொடக்கம் விடுதலை இயக்கங்களாக இளைஞர்கள் ஆயுத ரீதியான போராட்ட இயக்கங்களை ஆரம்பித்தாலும், வட்டுக் கோட்டை தீர்மானத்திற்கு பின்னர் அறவழியிலான அகிம்சைப் போராட்டம் முற்றாக மௌனித்து, ஆயுதப் போராட்டம் கரந்தடி தாக்குதலுடன் தொடங்கி மரபுப் படையணியாக தமிழீழ விடுதலைப் புலிகள் வளர்ச்சியடைந்து, முப்படை அணியாக பல சாதனை தியாகங்களை புரிந்தும் ஈழத்தமிழர்களுக்கான விடுதலை இன்றி 2009 மே 18ல் போர் முள்ளிவாய்க்காலில் மௌனித்தது என்பது வரலாறு.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட காலத்தில், விடுதலைப் புலிகள் – இலங்கை அரசு போர் நிறுத்த ஒப்பந்தம் 2002 பெப்ரவரி 22ல் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையிலும், இலங்கை அரசின் போர் நிறுத்த மீறல்களை கண்டித்து விடுதலைப் புலிகளால் வடகிழக்கில் சில தடவைகள் கதவடைப்பு ஹர்த்தால் கவன ஈர்ப்பு போராட்டங்களும் இடம்பெற்றன என்பதும் வரலாறு.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்வேறு சந்தர்ப்பங்களில் கதவடைப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காகவும், இனப்பிரச்சினைக்கு தீர்வு கோரியும் கதவடைப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஆனால் தந்தை செல்வா காலத்திலும், தலைவர் பிரபாகரன் காலத்திலும், 2009 மே 18க்கு பின்னர் தமிழ்தேசிய கூட்டமைப்பு இரா. சம்மந்தன் ஐயா காலத்திலும் இடைக்கிடை கதவடைப்பு போராட்டங்கள் பூரண ஹர்த்தாலாக முழுநாள் இடம்பெற்றதையே காணலாம். அரை நாள் நேரம் குறித்து நண்பகல் 12 மணிவரை வடகிழக்கில் எப்பொழுதும் ஹர்த்தால் இடம்பெற்ற வரலாறு இல்லை. அப்படி ஒரு போராட்டத்திற்கான அழைப்பை எவருமே விடவும் இல்லை.



ஆனால் கடந்த வாரம் முல்லைத்தீவில் முத்தையன்கட்டை குளத்திற்கு அருகாமையில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு ஒரு இளைஞன் மரணமான சம்பவத்தை கண்டித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி பதில் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் திடீரென அறிவித்த ஹர்த்தால் போராட்ட அழைப்பு முதல்நாளிலேயே கோணலானது. அதாவது கடந்த 15ம் திகதி வெள்ளிக்கிழமை ஹர்த்தால் அறிவிப்பை ஊடகங்களில் வழங்கிய பின்னர்தான் மன்னார் மடு தேவாலயப் பெருவிழா அன்றைய நாளில் உள்ளது என்பது கத்தோலிக்க பாதிரியார்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகர்கள் என பல தரப்பட்டவர்களின் அழுத்தங்களால் தமிழரசுக் கட்சி பதில் தலைவருக்கும், பதில் செயலாளருக்கும் தெரியவந்தது. இதனால் மன்னார் ஆயர் இல்லத்தின் அழுத்தம் காரணமாக 15ம் நாள் வெள்ளிக்கிழமை என அறிவித்த ஹர்த்தால் பின்னர் 18ம் நாள் திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டதாகவும், பூரண ஹர்த்தால் எனவும் அழைப்பு கொடுக்கப்பட்டது.

நல்லூர் திருவிழா காலத்தில் யாழ் மாவட்டம் முழுவதும் பக்தி எழுச்சியுடன் காணப்படும். இது நல்லூர் கொடியேற்றம் ஆரம்பமாகி தீர்த்தோற்சவம் முடியும் வரை வருடாவருடம் இந்த நடைமுறை பேணப்படும் ஓர் மாவட்டம்.



இதனை கவனத்தில் எடுக்காமல் 18ம் திகதி திடீரென அறிவித்த கடையடைப்பு போராட்டம் பல வர்த்தக சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூக ஆர்வலர்களின் எதிர்ப்பு காரணமாக அன்றைய ஹர்த்தாலுக்கு முதல் நாள் 17ம் திகதி மீண்டும் ஒரு அவசர அழைப்பாக பதில் செயலாளர் 18ம் திகதி ஹர்த்தால் அரை நாள் மட்டும் மதியம் 12 மணி வரை இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

உண்மையில் ஹர்த்தால் கதவடைப்பு என்பது அரை நாள் போராட்டமாக நடத்தப்பட்டது – ஈழத்தில் தமிழ்தேசியப் போராட்ட வரலாற்றில் இதுதான் முதல்தடவை. அடையாள உண்ணாவிரதம் மட்டுமே நண்பகல் 12 அல்லது பி.01 மணியுடன் நிறைவடையும் என நேரம் குறிப்பிட்டு போராட்டங்கள் நடந்தன. எக்காரணம் கொண்டும் ஹர்த்தால் போராட்டம் முழுநேரம் காலை தொடக்கம் மாலை வரையும் பூரண ஹர்த்தால் போராட்டமாகவே நடைபெற்றதே கடந்தகாலத்தின் வரலாற்று உண்மை.

தமிழரசுக் கட்சியின் கடந்த 18ம் தேதி நடந்த அரை நாள் ஹர்த்தால் வெற்றியடையவில்லை. அதனை ஒரு பொருட்டாக வர்த்தகர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. வழமையாக கடைகள் நகர் பகுதியில் காலை 10 மணிக்கே திறக்கப்படும்; அப்படியானால் 10 தொடக்கம் 12 மணிவரை 2 மணித்தியாலங்களை இலக்கு வைத்தே அந்த ஹர்த்தால் போராட்டம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

அந்த போராட்டத்தில் ஏட்டிக்கு போட்டியாக சமூக வலைத்தளங்களில் பூட்டப்பட்ட கடைகளின் படங்களும், திறக்கப்பட்ட கடைகளின் படங்களும் அன்று முழுவதும் அவரவர் விரும்பியபடி சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தினர். இதில் சிலர் கடைகள் திறக்குமுன்னம் காலை 8–9 மணிக்கு சென்று படங்களை எடுத்து

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தமிழ் மக்களின் நிராகரிப்பும் சுமந்திரனின் அரசியல் தோல்வியும்



**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு திருமிகுசிவில் சமூக செயற்பாட்டாளரும்,மனித உரிமை ஆர்வலருமான திரு. சிவயோகநாதன் சீலன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது. இந்த நேர்காணலை காணொளியில் முழுமையாக பார்வையிட You-Tube இல் முழு மையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

### சுமந்திரன் மீதான மக்களின் நிராகரிப்பு சீலன் அவர்கள் கூறுவதாவது:

தமிழ் மக்கள் ஏற்கனவே தேர்தல் மூலம் சுமந்திரனை நிராகரித்துவிட்டனர். இருந்தாலும் அவர் மீண்டும் மீண்டும் அரசியல் தலைவராகத் தோன்ற முயல்கிறார். மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து செயற்படுகிறார். இது தான் சமீபத்திய ஹர்த்தால் முயற்சியிலும் வெளிப்பட்டது.

### ஹர்த்தால் தோல்வி

சுமந்திரன் அறிவித்த ஹர்த்தால் 15ஆம் திகதி நடைபெற வேண்டியது. ஆனால் அந்த நாளில் வடக்கிலும் கிழக்கிலும் முக்கியமான விழாக்கள் நடந்ததால் மக்கள் பங்கேற்கவில்லை. மடுமாதா திருவிழா, நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா போன்ற சமய நிகழ்வுகளுடன் முரண்படுவதாக இருந்ததால் ஹர்த்தால் ஒத்திவைக்கப்பட்டது.



பின் இந்த ஹர்த்தால் 18ஆம் திகதி நடைபெற்ற போதும் அது வெற்றியடையவில்லை. கடந்த காலங்களில் ஹர்த்தால் என்றால் பள்ளிகள், அலுவலகங்கள், தொழில் துறைகள் அனைத்தும் முடங்கிவிடும்.

ஆனால் இம்முறை பெரும்பாலான வர்த்தக நிலையங்கள்திறந்திருந்தன. பேருந்துகள், பாடசாலைகள் இயல்பாக இயங்கின. சில கடைகள் மூடப்பட்டன. இதன் மூலம் ஹர்த்தாலுக்கு மக்களின் ஆதரவு இல்லை என்பது தெளிவானது.

ஹர்த்தாலை மக்கள் ஆதரிக்கவில்லை என்பது சுமந்திரன் மக்களிடையே நம்பிக்கையை இழந்துவிட்டார் என்பதற்கான சான்று. இது அவர் தலைமையிலான அரசியல் போராட்டங்கள் இனி வெற்றி பெறாது என்பதையும் காட்டுகிறது.

### சுமந்திரனின் அரசியல் தகுதி சந்தேகம்

சுமந்திரன் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைக்கு வந்த விதமும் கேள்விக்குறியே. அவர் சட்ட நுணுக்கங்களின் மூலம் அந்தப் பதவியைப் பெற்றார். ஆனால் கட்சியின் மத்திய குழுவில் சரியான முறையில் தெரிவு செய்யப்படவில்லை.

மக்களாலும்அவர்நிராகரிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான ஒருவருக்கு தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தகுதி இல்லை. மேலும், அவர் மக்களிடம் நெருக்கமின்றி, அரசு பாதுகாப்பினரின் பாதுகாப்புடன் மட்டுமே நகர்கிறார்.

உண்மையான மக்கள் பிரதிநிதி என்றால் மக்களே அவருக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும். இது அவருடைய தலைமையின் பலவீனத்தை காட்டுகிறது.

### சிவில் சமூகங்கள் மற்றும் அரசியல் கட்சிகள்

சுமந்திரன் கடந்த காலத்தில் சிவில் சமூகங்களின் பங்களிப்பை மறுத்து வந்தார். "அரசியல் கட்சிகளுக்கே உரிமை உள்ளது, சிவில் சமூகங்களுக்கு இல்லை" என்று கூறியிருந்தார்.

ஆனால்இன்று மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவர் தான் பொதுமக்களின் போராட்டத்தை முன்னெடுக்க முயல்கிறார். இது பெரிய முரண்பாடு. மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாதவர் போராட்டத்தை நடத்த முடியாது.

### சர்வதேச விசாரணை கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் பல அரசியல் கட்சி தலைவர்களும் சமயத் தலைவர்களும் சிவில் சமூகங்களும் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு மனு அளித்தனர். அந்த மனுவில் இரண்டு முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டன.




***1. 2009 போரில் நடந்த இனப்படுகொலை மற்றும் தொடர்ச்சியான இனஅழிப்பு சர்வதேச ரீதியாக விசாரிக்கப்பட வேண்டும்.***

***2.செம்மணி போன்ற இடங்களில் நடைபெறும் அகழ்வுகள் சர்வதேச கண்காணிப்புடன் மட்டுமே நம்பகத்தன்மையுடன் நடைபெற முடியும்.***

இந்த மனுவிற்கு பல சமயத்தலைவர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், பாதிக்கப்பட்ட அம்மாக்கள் சங்கமும் உட்பட 56 அமைப்புகள் கையொப்பமிட்டிருந்தன.

### செம்மணி மனித புதைகுழி

செம்மணி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய வலியும் சாட்சியுமாக உள்ளன.

ஆனால் அரசு சரியான அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. சில எலும்புகள் மட்டும் பரிசோதனைக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.மற்றவை புதைக்கப்படுகின்றன. இது உண்மையை மறைக்கும் முயற்சியாகக் கருதப்படுகிறது.

எனவே சர்வதேச தராதரத்தில், நிபுணர்களின் கண்காணிப்புடன் அகழ்வுகள் நடைபெற வேண்டும். இல்லையெனில் உண்மை வெளிச்சத்திற்கு வராது.

### சோமரத்ன ராஜபக்ஷ சாட்சி

செம்மணி புதைகுழி தொடர்பாக முக்கியமான சாட்சியாளராகக் கருதப்படும் இராணுவ அதிகாரி சோமரத்ன ராஜபக்ஷ தற்போது சிறையில் உள்ளார். அவர் வெளிநாட்டு விசாரணைக்கு சாட்சி அளிக்கத் தயாராக உள்ளார் என்று அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

அவர்சமீபத்தில் "மணியன்தோட்டத்திலும் தமிழர்கள் புதைக்கப்பட்டுள்ளனர்" என்று வெளிப்படையாக கூறியுள்ளார். ஆனால் சிறைக்குள்ளும் அவருக்கு அச்சுறுத்தல்கள் உள்ளன. எனவே அவருக்கு சரியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அவர்வழங்கும்சாட்சிகள்உண்மையை வெளிக்கொண்டு வர பெரும் பங்கு வகிக்கும்.

### அரசின் நிலைப்பாடு மற்றும் தமிழர்களின் போராட்டம்

இலங்கை அரசு ஒருபோதும் இராணுவத்தை பொறுப்புக்கூறச் செய்யாது என்றும் சர்வதேச விசாரணையையும் ஏற்காது என்றும் வெளிப்படையாக அறிவித்துள்ளது.



இதனால் தான் தமிழ் மக்கள் சர்வதேச நீதியை நாடுகிறார்கள். உள்ளூர் நீதிமுறையில் நம்பிக்கை இல்லை என்பதால் சர்வதேச விசாரணை மட்டுமே தீர்வாகும்.

**எனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட சுமந்திரன் போன்றோர் தமிழ் தேசிய போராட்டத்தை முன் னெடுக்க முடியாது.**

**- தமிழர்களின் நீதி கோரிக்கை சர்வதேச மட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்பட வேண்டும்.**

**- செம்மணி உள்ளிட்ட புதைகுழிகள் குறித்து உண்மையை வெளிக்கொண்டு வர சர்வதேச கண்காணிப்புடன் விசாரணை தேவை.**

**- சோமரத்ன ராஜபக்ஷ போன்ற சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.**

• • •

# விளை நிலங்களைப் பெற ஜனாதிபதி செயலகம் முன் போராடிய விவசாயிகள்





கிண்ணியான்



திருகோணமலை முத்துநகர் விவசாயிகள், அபகரிக்கப்பட்ட தங்களது விவசாய நிலத்தை மீட்க, கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகம் முன்பாக *240* கிலோமீட்டர் தூரம் பயணம் மேற்கொண்டு போராடியுள்ளனர்.

குறித்த முத்துநகர் விவசாயிகளின் நெற்செய்கைக்கான சுமார் *800* ஏக்கர் அளவில் உள்ள நிலத்தை, இலங்கை துறைமுக அதிகார சபையினரின் காணி என்ற போர்வையில், இரு தனியார் நிறுவனங்களுக்கு சூரிய மின்சக்தி உற்பத்திக்காக (மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி) வழங்கியுள்ளனர்.

இதனால், அப்பகுதி விவசாயிகள் தங்களது எதிர்வரும் பெரும்போக விவசாய செய்கையை கூட மேற்கொள்ள முடியாத நிலையில் தவிக்கின்றனர்.



இது குறித்து அப்பகுதி விவசாய சங்கத் தலைவி திருமதி எஸ். சஹீலா தெரிவிக்கையில், "அண்மையில் எங்களுடைய முத்துநகர் விவசாய காணி கபளீகரம் செய்யப்பட்டதை அடுத்து ஜனாதிபதி செயலகத்துக்கு சென்றோம். எங்களைச் சந்திக்க விடாது காவல்துறையினர் தடுத்தனர். இதனால் போராட்டத்தை முன்னெடுத்தோம். அதன் பின்னர் குறித்த செயலகத்தில் குறிப்பிட்ட சிலரை மட்டுமே சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. இதன் போது அரச தரப்பில், அவர்கள் எதிர்வரும் இம் மாதம் *30*ம் திகதிக்குள் நல்லதொரு முடிவினை தருவதாகக் கூறினர். பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ள தருவாய் தற்போது நெருங்கியுள்ளது.

இதனால் எங்களுக்கான விவசாய நிலத்தை மீள ஒப்படைக்க வேண்டும். இதனால் எங்கள் வாழ்வாதாரம் முற்றுமுழுதாக பாதிக்கப் பட்டுள்ளது. கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது ஆளும் கட்சி பிரதிநிதிகளைச் சந்திக்க சென்ற போது வாய்ப்பு கிடைக்கவில்லை. எங்களுக்கான காணி தொடர்பில் துறைமுக அதிகார சபைக்கே சொந்தம் எனக் கூறினர். *53* வருடங்களாக விவசாயம் செய்து வந்தோம். சிறுபோகம், பெரும்போகம் என மூன்று முறை செய்துள்ளோம். சோலார் திட்டங்களை வரவேற்கிறோம். ஆனால் எங்கள் காணிகளைக் கையகப்படுத்தாதீர்கள். விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு. விவசாயத்தை நிலத்தைத் தவிர்த்து ஏனைய காட்டுப் பகுதிகளை வைத்து செய்யலாமே?" என்றார்.




அப்பாவி விவசாயிகள் நெற்செய்கையை நம்பியே வாழ்ந்து வந்த நிலையில் தற்போது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இதனால், திருகோணமலை மாவட்ட ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு உள்ள காணிகளைத் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளனர். இதனால் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இது குறித்து அப்பகுதி விவசாய சங்கத்தின் உப தலைவர் பாபு தெரிவிக்கையில், "*1972*ல் இருந்து எங்கள் அப்பாவின், அப்பாவின் காலத்தில் இருந்து இங்கு விவசாயம் செய்து வருகிறோம். இப்போது இரு வருடங்களாக இலங்கை துறைமுக அதிகார சபை தங்கள் காணி எனக் கூறி சோலார் திட்டத்துக்காகக் கையகப்படுத்தியுள்ளனர். இதனுடன் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட எங்களுக்கு இது தொடர்பில் உதவுவதாகச் சந்தோஷப் படுத்தினர். பிரதி அமைச்சரைச் சந்திக்க முயற்சித்த போதும் பலன் கிட்டவில்லை. இதனால் தான் மாவட்ட செயலகம் தொடக்கம் ஜனாதிபதி செயலகம் வரை போராட்டம் நடத்தினோம். தற்போதைய அரசாங்கம் நீதியைப் பெற்றுத் தர வேண்டும். போராட்டத்தின் போது எங்களைக் காவல்துறையினர் அடித்து உதைத்துத் தாக்கினார்கள். ஆளும் கட்சியினரே இதனைத் தூண்டிவிட்டார்கள். எங்களுக்கு அரச அதிகாரிகள் மூலமாகப் பேச்சுவார்த்தை தேவையில்லை. மக்கள் பிரதிநிதியாகிய நீங்களே தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்" எனத் தெரிவித்தார்.



நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள நிலங்களையே தற்போது சூரிய மின்சக்தி உற்பத்திக்காக அபகரித்துள்ளனர். பரம்பரை பரம்பரையாக பல அரசாங்கங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போதும் கூட விவசாயத்தைச் செய்து வந்தோம். விவசாய பூமியை அபிவிருத்தி செய்யவும்,

தொடர்ச்சி *17*ஆம் பக்கம்

கட்டுரை

# இன அழிப்புக்கான சர்வதேச நீதியை மையப்படுத்தும் மனுவில் தாயகத்தின் 56 மத, குடிசார், மற்றும் அரசியல் பிரதிநிதிகள் கையெழுத்து

*ஒகஸ்ட் 12, 2025*

***ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் ஆணையாளர்,***
***ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம்***
***ஜெனீவா, சுவிட்சர்லாந்து.***

***ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் நிரந்தர மற்றும் அவதானிப்பு நாடுகளின் அங்கத்துவர்கள்***

***மேன்மைமிகு ஐயா, அம்மணி!***

***ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 60ஆவது அமர்வு – ஸ்ரீலங்கா அரசிற்கான பன்னாட்டு விசாரணையும் நடவடிக்கையும்***

மிகத் தெளிவாக விடயங்களை வெளிப்படுத்தும் முகமாக எங்களால் எழுதப்படும் இந்தக் கடிதத்தை நீங்கள் இதற்கு முன் இதே விடயம் தொடர்பாக எழுதப்பட்ட கடிதங்களுடன் இணைத்தோ அல்லது தனித்தோ வாசிக்க முடியும் என்பதை தங்களின் கவனத்திற்குத் தருகிறோம்.

1. பன்னாட்டு விசாரணையை நிகழ்த்துவதற்காக 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை வரைபின்கீழ் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டவை நிகழ்த்தப்பட்டுள்ளதா என்பதையும் அக் குற்றங்களின் நோக்கத்தையும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் கூடிய, பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவ வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். எந்தவொரு விசாரணைக்கும் அளிக்கப்படும் அதிகாரம், 1948 இனப்படுகொலை வரைபின்படி முழுக் காலவரையறையையும் உள்ளடக்க வேண்டும்.

ஸ்ரீலங்காவின் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள தமது தாயகத்தில் ஈழத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் சுயாதீன நீதிப்பொறிமுறையின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும் என உலகப் புகழ்பெற்ற பன்னாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், இலங்கை அரசின் செயற்பாடுகள், முழுஅளவிலோஅல்லதுபகுதியளவிலேனும்ஈழத்தமிழரைஅழிப்பதற்கானநோக்கத்தைக்கொண்டிருப்பதுடன்அவ்வழிப்புத்தொடர்பானஎந்தவொரு விசாரணையும் நடைபெறாதவாறு நுட்பமாகத் தடை செய்துவருவதும் இனப்படுகொலை வரைபின் அகவிதி 2இன் படி இனப்படுகொலையாகும்.

1956 ஜூன் மாதம் ஸ்ரீலங்கா அரச ஆதரவுடன் சிங்களக் காடையர்களால் ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்லோயாப் படுகொலைகள் என அறியப்படும் முதலாவது பாரிய இனவழிப்பு நடைபெற்ற நாளிலிருந்து, தம்மீது நடைபெற்ற பன்னாட்டுக் குற்றங்களை விசாரிக்கும் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளிடம் தொடர்ந்து ஈழத்தமிழர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இப்பொறிமுறையின் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நீண்டநாளாகத் தொடரும் வேதனையினைத் தீர்க்கவும் காணாமலாக்கப்பட்டவர்களின் விதியை அறிந்துகொள்ளவும் முடியும்.

இந்த விசாரணையில் இலங்கை அரசின் பங்கு இருந்தால் அது பாரபட்சமானதாகும், ஏனெனில் இப்பன்னாட்டுக் குற்றங்களை நிகழ்த்தியவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் அரசும் அரசுடன் தொடர்புடையவர்களும் ஆகும்.

இலங்கை அரசு, எந்தவொரு வகையிலும் பன்னாட்டு விசாரணைக்கு எதிராகவே இருப்பதுடன் ஈழத் தமிழர்களின் மீது தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையினை நிகழ்த்தும் இடைவிடாத திட்டமிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக ஐ.நா. சாசனத்தின் அகவிதி 2(7)இல் குறிப்பிடும் "அரசிற்கிருக்கும் இறையாண்மையினை" இதற்கான பாதுகாப்புக் கவசமாக ஸ்ரீலங்கா பயன்படுத்தி வருகிறது.

ஆனால், இறையாண்மையைப் பன்னாட்டுக் குற்றங்களுக்கு எதிரான ஒரு கவசமாக பயன்படுத்த முடியாது என்பதே சட்ட ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உறுதி செய்யப்பட்டுள்ள நியதி ஆகும். இதனை, சிரியாவுக்கு விசாரணை செய்ய ஐ.நா. மனித உரிமை ஆணையகம் ஏற்படுத்திய விசாரணைக் குழு போன்ற ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆகியவை எடுத்த செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

ஈழத் தமிழர்கள் பன்னாட்டு மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுவோர் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்தும் இருக்கிறோம். இந்நம்பிக்கையின்படி பன்னாட்டு விசாரணையைக் கோருவதற்கு உரிமையும் எங்களுக்கு உள்ளது.

**இவற்றினடிப்படையில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 60வது கூட்டத் தீர்மானம்,**

(அ) ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க அதிகாரம் அளிக்க வேண்டும், அல்லது

(ஆ) அத்தகைய பொறிமுறையை அமைக்க ஐ.நா. பொதுச் சபையிடம் கோரிக்கை விடுக்கும் விதமாக இருக்க வேண்டும்.

எனக் கவனமாக வலியுறுத்துகிறோம். இந்தப் பொறிமுறைக்கு 1948ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை வரைபின் கீழ் குற்றச் செயல்களின் வடிவமைப்பைத் தீர்மானிக்கும் அதிகாரமும், சம்பந்தப்பட்ட முழு காலவரையறையையும் உள்ளடக்கும் அதிகாரமும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

2. ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிக்க, இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் (The Convention on the Prevention and Punishment of the Crime of Genocide) அகவிதி IX ன் கீழ், முழுமையான காலவரையறையையும் உள்ளடக்கும் வகையில், ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர், பார்வையாளர் நாடுகள், வழக்குத் தொடங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புத்துறை அமைச்சராக இந் நாட்டின் சனாதிபதி உள்ள நிலையில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு படைகள் செய்த போர் குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் அரசின் முழுமையான ஒத்துழைப்பின்றி சாத்தியமற்றவை எனவும் அரசின் நேரடி பொறுப்புடனேயே நிகழ்ந்ததாகவும் சுயாதீனமாக அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இங்கு குறிப்பாக, ஐ.நா. பொதுச் செயலரின் நிபுணர் குழு (2011), இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையரின் விசாரணை ( OISL அறிக்கை, 2015), மற்றும் 2007இல் சித்திரவதைகளுக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் பயணம் ஆகிய அறிக்கைகளைக் கருத்திற்கொண்டாலே இக்குற்றங்கள் அரச பின்புலத்தில் நிகழ்த்தப்பட்டதற்குப் போதுமான ஆதாரங்களை வழங்கியுள்ளன. இந்த உறுதியான ஆதாரத் தொகுப்பு, ஸ்ரீலங்காவிற்கு எதிராகப் பன்னாட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஆதாரமாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

இப்போது 16 ஆண்டுகள் கடந்தும், தங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலையின் உச்சத்தை இந்த உலகம் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததுடன், நுணுக்கமாக அவ் இனப்படுகொலையை மறுப்பதும், அமைதியாக இருப்பதன் மூலம் புறக்கணிப்பதும் ஸ்ரீலங்கா தொடர்ந்து மேற்கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைச் செயல்களுக்கு உலகம் ஆதரவு அளிப்பதாகவே ஈழத் தமிழர்கள் உணர்ந்து வருகின்றனர்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

இன அழிப்புக்கான.. . தொடர்ச்சி ...

1948 இனப்படுகொலை வரைபின் அகவிதி IX இல் குறிப்பிடப்பட்டிருக்கும் உடன்படிக்கை அடிப்படையிலான அதிகாரப் பிரிவின் கீழ், அவ்வரைபில் பங்கேற்றிருக்கும் இரண்டு நாடுகளுள் ஒன்று, மற்றொரு நாடு மேற்கொள்ளும் மீறல்களைக் குற்றஞ்சாட்டி நேரடியாக வழக்குத் தொடங்கலாம். ஸ்ரீலங்கா 12 அக்டோபர் 1950 அன்று அவ்வரைபின் அகவிதி IX உட்பட அனைத்து விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு அவ்வரைபில் இணைந்துள்ளது. இதனால், UNHRC இன் எந்த ஒரு உறுப்பினர் அல்லது பார்வையாளர் நாடும், ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கான ஸ்ரீலங்கா அரசுப் பொறுப்பை நிரூபிக்க நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

எனவே, குறைந்தபட்சம் ஒரு உறுப்பினர் அல்லது பார்வையாளர் நாடு, ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிப்பதற்காக, இனப்படுகொலை வரைபில் அகவிதி IX கீழ், ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்.

3. இலங்கையின் வடபகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகளை மேற்பார்வை செய்வதற்காக, “மனிதப் புதைகுழி பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான சர்வதேச நெறிமுறைகள் - போர்ன்மொத் நெறிமுறை” (The Bournemouth Protocol) கீழ் அதிகாரம் வழங்கப்பட்டு பன்னாட்டு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என வலியுறுத்தல்.

வலியுறுத்தல் 1-இன் பந்திகள்; 3 மற்றும் 4-ஐ மேற்கோள் காட்டுகையில், ஸ்ரீலங்கா அரசின் ஆதரவோடு நடைபெறும் எந்தவொரு விசாரணையும் இயல்பாகவே பாகுபாடுடையதாக இருக்கும் என்பது தெளிவாகிறது. செம்மணி மனிதப் புதைகுழி, ஈழத் தமிழ் பொதுமக்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டதற்கான வெளிப்பட்ட சான்றாக திகழ்கிறது. எலும்புக் காவல்கள், பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள், இளம் குழந்தைகள் கூட இருந்ததை வெளிப்படுத்துகின்றன.

முப்படை மற்றும் காவல்துறையை உள்ளடக்கிய அரசின் ஆதரவுடன் செயல்பட்ட அமைப்புகள், ஈழத் தமிழ் பொதுமக்களை படுகொலை செய்து, இரகசியமாக புதைத்தன என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. அரசின் ஆதரவுடன் நடைபெறும் இனப்படுகொலைக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சமூகம்; தங்களைப் பாதுகாக்க முயன்ற போதிலும், “உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” என்ற கோதாவில் ஈழத் தமிழ்மக்களின் மீது அழித்தொழிப்பு நடத்தப்பட்டது. செம்மணி மனிதப் புதைகுழியானது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தாண்டி, அடையாளம் காணப்பட்ட ஈழத்தமிழ் மக்களைப் பகுதியளவிலேனும் அழிக்கத் திட்டமிட்ட நோக்கம் இருந்ததை வெளிப்படுத்தும் உறுதியான சான்றாகும். இது, ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டை வலுப்படுத்துகிறது.

ஸ்ரீலங்காவின் நீதித்துறை வரலாற்றில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கான ஆதாரங்கள் மறைக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. மொஹமட் தாஜுதீன் வழக்கு அவற்றில் ஒன்று. இத்தகைய அச்சுறுத்தும் முறை, உள்நாட்டு விசாரணைகளின் நேர்மையைப் பற்றித் தீவிரமான சந்தேகங்களை எழுப்புகிறது. இத்தகைய செயல்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்ற எந்த அறிகுறியும் இல்லை, மேலும் செம்மணி வழக்கும் அதே நிலையை சந்திக்கும் என்ற நியாயமான அச்சம் ஈழத்தமிழ் மக்களிடம் உள்ளது. ஊடக அறிக்கைகளின் படி 2023 செப்டம்பரில், ஸ்ரீலங்காவின் வடபகுதியான முல்லைத்தீவில் பணியாற்றிய ஒரு தமிழ் நீதிபதி, உயிரச்சுறுத்தல் மற்றும் கடுமையான மன அழுத்தம் காரணமாக, தனது பதவியை விடுத்து ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறினார். அவரின் ராஜினாமா, ஒரு தொல்பொருள் தள வழக்கை உள்ளடக்கிய சில நுணுக்கமான வழக்குகளுக்கான அழுத்தம் மற்றும் அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்டது. இது, இங்கு பாதுகாப்பின்மையையும் நீதித்துறையின் சுயாதீனமின்மையையும் வெளிப்படுத்துகிறது.

இந்த உண்மைகளின் அடிப்படையில், செம்மணி மனிதப் புதைகுழி தளத்தில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியை மேற்பார்வை செய்து கண்காணிக்கவும், வழக்கு நடைமுறைகளில் பன்னாட்டுத் தலையீட்டை எளிதாக்கவும், “போர்ன்மொத் நெறிமுறை” (The Bournemouth Protocol ) பிரேரிக்கும் அதிகாரத்துடன் கூடிய சுயாதீன நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்ற முன்மொழிவை, ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தில் சேர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

4. ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 60ஆவது தீர்மானத்தில், பன்னாட்டு மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு வரைபுகளுக்கு முரணான தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் திருத்தச் சட்டங்கள் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுவதை நிறுத்துமாறு வலுவான அழைப்பைச் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

1983 ஆகஸ்ட் 8 அன்று இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட 6ஆவது திருத்தச் சட்டம், குமுகாய மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை (ICCPR - 23 மார்ச் 1976) ஐ வெளிப்படையாக மீறுகிறது. இது, சுயாட்சி அரசியல் நிலையைத் தீர்மானிக்கும் உரிமையை அமைதியான முறையில் வலியுறுத்துவதை குற்றமாக்குகிறது. இதன்மூலம் இவ்வரசியலமைப்புத்திருத்தமே பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் (PTA) முன்னோடியாகச் செயல்பட்டது. மேலும் இத்திருத்தமானது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவியை பறித்தும், அரசியல் கருத்தொன்றை மட்டும் கொண்டதற்காக கடுமையான குடியுரிமைத் தடைகளையும் விதித்தும் வருகிறது.

இந்த திருத்தச் சட்டம், அகவிதி 1இன் கீழ் ஈழத்தமிழ் மக்களுக்கு தங்கள் அரசியல் நிலையை சுதந்திரமாகத் தீர்மானிக்கும் உரிமையை மறுக்கிறது. அகவிதி 19இன் கீழ் பாதுகாக்கப்படும் ஜனநாயக கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குகிறது. அகவிதி 25 இன் கீழ் உறுதியளிக்கப்படும் அரசியல் பங்கேற்பைத் தடுக்கிறது. மேலும், அகவிதி 26 ஐ மீறி, ஒரேயொரு சமூகத்தை மட்டுமே குறிவைக்கிறது. இதனால், தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு ஜனநாயக வழிமுறைகளால் தீர்வு காணும் அனைத்து வாயில்களையும் மூடியதன் ஊடாக ஸ்ரீலங்காவின் பன்னாட்டுக் கடப்பாடுகளுக்கு முரணான கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளது.

இருப்பினும், ஸ்ரீலங்கா அரசு, இத்தகைய கொடூரமான நடவடிக்கைகளின் அடிப்படைக் காரணமான 6வது திருத்தச் சட்டத்தைத் தொடாமல், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை நீக்குவதற்கு மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினைப் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கும் வழி திறந்தேயிருக்கின்றது. மேலும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை நீக்குவதற்கான தெளிவான காலக்கெடு எதுவும் இல்லை. இதனால், பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது தொடர்ந்தும் அடக்குமுறை மற்றும் அச்சத்தின் கருவியாக இருந்து வருகிறது. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்பு சட்ட நடைமுறையில், ஈழத் தமிழ் குமுகாய மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், இராணுவம் கைப்பற்றிய நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அச்சத்தில் வாழ்கிறார்கள்.

2007 ஆம் ஆண்டின் இலங்கை ICCPR சட்டமும், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமும் பன்னாட்டு ICCPR இன் கொள்கைகளை முழுமையாகவும் ஒருமைப்பாட்டுடனும் நடைமுறைப்படுத்தாததால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றின் அமுலாக்கம் பெரும்பாலும் காவல்துறையின் கீழ் இருப்பதால், தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் உள்பட பல்வேறு சமூகங்களுக்கு எதிராக அச்சட்டங்கள் பிரயோகிக்கப்படும்போது பாகுபாடாகப் பொருள்கோருவதும் விளக்கமளிப்பதும் செயற்படுவதும் நிகழ்கிறது.

எனவே, ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் தீர்மானத்தில், 6வது திருத்தச் சட்டத்தை நிறுத்தவும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை ஒரு குறிப்பிட்ட மற்றும் அமுலாக்கக்கூடிய காலக்கெடுவில் நீக்கவும் ஸ்ரீலங்காவிற்குத் தெளிவான, உறுதியான கோரிக்கையைச் சேர்க்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம். மேலும், பயங்கரவாதத் தடுப்பு சட்ட விதிகளை இன்னும் ஆபத்தான பிரிவுகளுடன் மீண்டும் அறிமுகப்படுத்தும் அல்லது மாற்றியமைக்கும் எந்தச் சட்ட முயற்சிகளையும் ரத்து செய்யவும் வலியுறுத்த வேண்டும். மற்றும், 6வது திருத்தச் சட்டம் போன்ற, பன்னாட்டு மனித

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**இன அழிப்புக்கான.. . தொடர்ச்சி ...**

உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு உடன்பாடுகளுக்கு முரணான எந்தவொரு சட்டத்தினையோ அல்லது அரசியலமைப்பு திருத்தங்களையோ எதிர்காலத்தில் உருவாக்குவதைத் தடுக்க வேண்டும். மேலும், ஈழத் தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிக்கும், அமைதியான இணைந்த வாழ்வை அச்சுறுத்தும், மற்றும் நிலங்களை மறுபெயரிடல் அல்லது அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கைப்பற்றும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நிறுத்துவதையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்

***முடிவாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60ஆவது அமர்வு தனது தீர்மானத்தில் பின்வரும் நடவடிக்கைகளை சேர்க்குமாறு வலியுறுத்தப்படுகிறது:***

***1. 1948ஆம் ஆண்டு இனப்படுகொலைக் குற்றங்களைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் படி முழுக் காலஅளவு அதிகாரத்தை உள்ளடக்கிய பணி ஆணையுடன், பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவுதல்.***

***2. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் தங்களின் கடமைகளின் படி, உறுப்புநாடுகள் மற்றும்-அல்லது பார்வையாளர் நாடுகள் ஸ்ரீலங்காவிங்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) வழக்குத் தொடங்குதல்.***

***3. செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீது சுயாதீன மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதி செய்ய போர்ன்மொத் நெறிமுறையை செயல்படுத்தக்கூடிய பன்னாட்டு நிபுணர் குழுவை அமைத்தல்.***

***4. பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டப் பொறுப்புகளுக்கு முரணான தற்போதைய அல்லது எதிர்கால சட்ட நடவடிக்கைகளின் இயற்றுதலை இடைநிறுத்தி, தடைசெய்தல்.***

*நன்றி.*

இவ்வண்ணம்,

*1.திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல்.*
*2.மன்னார்மறைமாவட்டஆயர்அ.ஞானப்பிரகாசம்*
*3.யாழ்ப்பாணம் குரு முதலவர் ஜோ.ஜெபரட்ணம்.*
*4.திருகோணமலை தென்கயிலை ஆதீனம் தவத்திரு : அகத்தியர் அடிகளார்.*
*5.கிழக்கிழங்கை இந்துக் குருமார் ஒன்றியம் தலைவர்: கனேசலோகநாதகுருக்கள்.*

**அருட் தந்தையர்கள்**

*6. S.ஜெயவர்த்தன.*
*7. அ.சக்திவேல்*
*8.A.கொன்பியூசியஸ்*
*9.கு.நந்தன*
*10.அ.லூக்ஜோன்.*
*11.T.ஜீவராஜ்*
*12.பா.அரியநேத்திரன் , தமிழ் பொது வேட்பாளர், 2024.*
*13. செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்ற உறுப்பினர் வன்னி.*
*14. மருத்துவர் இராமநாதன் அருச்சுனா பாராளு மன்ற உறுப்பினர் யாழ்ப் பாணம்.*
*15. நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் முன்னாள் வட மாகாணசபை முதலமைச்சர், மு.பா.உறுப்பினர்.*
*16.சு. பிறேமச்சந்திரன் மு.பா உறுப்பினர்.*
*17. ம.க.சிவாஜிலிங்கம். மு.பா உறுப்பினர்.*
*18. க.அருந்தபபாலன் மு.மா.சபை உறுப்பினர்.*
*19. ச.அனந்தி மு.மா.சபை உறுப்பிணர்*
*20. மா.நடராசா மு.மா.சபை உறுப்பினர்*
*21.வி.மணிவண்ணன் மு.முதல்வர் யாழ் மாநகர சபை.*
*22.தி.நிரோஸ், தவிசாளர் வலிகாமம் கிழக்கு பிர தேசசபை.*
*23.பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் யாழ் பல் கலைக்கழகம்.*
*24.ஏ.பரந்தாமன் மூத்த விரிவுரையாளர் யாழ் பல் கலைக் கழகம்.*
*25. கலாநிதி S .ஜீவசுதன். மூத்த விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்.*
*26.பொ.தை.ய.ஜசோதன் தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் யாழ் பல்கலைக் கழகம்.*
*27. T.லஜிதர் தலைவர் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.*
*28.ச.பிரகாஸ் செயலாளர் கிழக்கு பல்கலைக்கழக கலைப் பீடம் மட்டக்களப்பு.*
*29. சி.ஜோதிலிங்கம் சட்டத்தரணி யாழ்ப்பாணம்.*
*30.ச.வைஸ்னவி சட்டத்தரணி யாழ்ப்பாணம்.*
*31. செ.தேவி தலைவர் வலிந்து காணாமலாக்கப்பட் டோர் சங்கம் திருகோணமலை.*
*32.ச.சிவயோகநாதன்சிவில்சமூகசெயற்பாட்டாளர் கள் ஒன்றியம் மட்டக்களப்பு.*
*33.S. சிவகரன் குடிசார் அமைப்புக்களின் ஒன்றிம் மன்னார்.*
*34.மு.கோமகன் குரலற்றோரின் குரல் யாழ்ப் பாணம்.*
*35. ஜோ.அ.அலோஸியஸ் தலைவர் மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கம் யாழ்ப்பாணம்.*
*36.தெ.குமணன் மயிலிட்டி மீள்குடியேற்ற சங்கம் யாழ்ப்பாணம்.*
*37. ம.மரியநாயகம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்.*
*38. சே.கலையமுதன் மு.பி.சபை உறுப்பிணர்.*
*39. த.சுஜீவன் சிறகுகள் அமையம் யாழ்ப்பாணம்*
*40. சி.த.காண்டீபன் சமூக மாற்றத்திற்கான ஊடக மையம்.*
*41. S.கமலகாந்தன் தலைவர், தமிழர் கலை பண் பாட்டு மையம், திருகோணமலை.*
*42. வ.சுப்பிரமணியம். அகில இலங்கை தொழிலா ளர் சமூகங்களின் கூட்டம், யாழ்ப்பாணம்.*
*43. வி.முரளிதரன். தலைவர் வடமராட்சி குழு யாழ்ப்பாணம்.*
*44. கா. இராசலிங்கம் இளம்பிளறை கலை மண்றம் கதிரவெலி மட்டக்களப்பு.*
*45. செ.மதியரசு செயலாளர் மக்கள் திட்ட வரைவு அம்பாறை.*
*46. T.நேமீஸ்வரன் தலைவர் கால்நடை கூட்டுறவு சமாசம் மட்டக்களப்பு.*
*47. கி.சிவபாலன் செயலாளர் முதியோர் பிரஜைகள் சம்மேளனம். மட்டக்களப்பு.*
*48. T.நவஜோதி தலைவர் வெண்மயில் நிறுவணம் மட்டக்களப்பு.*
*49. T.தயானந்தன் தலைவர் செடோலங்கா மட்டக் களப்பு.*
*50. ஆ. பவானி தலைவர் சமூக பொருளாதார சிறு வர் அபிவிருத்தி நிறுவணம் மட்டக்களப்பு.*
*51. கலாநிதி இ.நா.சிறிஞானேஸ்வரன் அரசியல் செயற்பாட்டாளர் திருகோணமலை.*
*52 .பி.அருள்வேந்தன் சமூகசேவையாளர் திரு கோணமலை.*
*53.இ.ராஜீவ்காந் அரசியல் செயற்பாட்டாளர் திரு கோணமலை*
*54.க.லவகுசராசா அகம் மனிதாபிமான வள நிலையம் திருகோணமலை.*
*55.மேரிரஞ்சினிவலிந்துகாணாமலாக்கப்பட்டோர் சங்கம் யாழ்ப்பாணம்.*
*56.N.அனந்தராஜ் முன்னாள் செயலாளர்வல் வெட் டித்துறை பிரஜைகள் குழு யாழ்ப்பாணம்.*

• • •

**அமெரிக்காவுக்கு ... தொடர்ச்சி ...**

குறித்த இந்திய கோரிக்கைகளுக்கு பெய்ஜிங் ஏற்கனவே பதிலளிக் கத் தொடங்கிவிட்டது என்று ஜெய்சங்கரிடம் வாங் கூறிய தாக எகனாமிக் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்றுமதி ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வாங் புது தில்லிக்கு மூன்று நாள் பயணமாக சென்றிருந்தார், அங்கு அவர் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுடன் எல்லைப் பேச்சுவார்த்தை நடத்தி பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார். அரிய மண் காந்தங்களை உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளரான சீனா, ஏப்ரல் மாதம் ஏழு நடுத்தர முதல் கனரக அரிய மண் பொருட்கள் மற்றும் சில காந்தங்களின் ஏற்றுமதிக்கு கட்டுப் பாடுகளை அறிவித்தது. இது விண்வெளி, ஆட்டோமொபைல் மற்றும் குறைக்கடத்தி தொழில்களுக்கு முக்கியமான விநியோகச் சங்கிலிகளைப் பாதித்துள்ளது.

தெற்காசிய நாட்டிற்கு உரங்கள் மற்றும் சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங் களை ஏற்றுமதி செய்வதை பெய்ஜிங் கட்டுப் படுத்தியுள்ளதாகவும், இது விவசாயம் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை பாதித்துள் ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டிருந்தன.

சீனாவுடன் இந்தியா ஒரு "நிலையான, கூட்டுறவு மற்றும் எதிர்கால உறவை" விரும்பு வதாக ஜெய்சங்கர் வாங்கிடம் கூறினார். ஆசியாவின் இரண்டு பெரிய நாடுகளும் அமெரிக்காவிடமிருந்து கடுமையான வரிகளை எதிர்கொள்ளும் நேரத்தில் தங்கள் பொருளாதார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதை தற்போது விரும்புகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வரிகளை மறைமுகமாகக் குறிப் பிட்டு, உலகம் தற்போது விரைவான மாற்றங்களை அனுபவித்து வருவதாகவும், ஒருதலைப் பட்சமான மிரட்டல் அதிகரித்து வருவதாகவும், சுதந்திர வர்த்தகம் மற்றும் சர்வதேச ஒழுங்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்களை எதிர்கொள் வதாகவும் வாங் ஜெய்சங்கரிடம் கூறினார் என்று சின்ஹுவா செய்தி நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

இந்தியாவும் சீனாவும் உலகளாவிய பொறுப்புணர்வு உணர்வை வெளிப்படுத்தவும், முக்கிய சக்திகளாக செயல்படவும், பல துருவ உலகத்தை மேம்படுத்த பங்களித்து செயல்பட வாங் அழைப்பு விடுத்ததாக அறிக்கை தெரி வித்துள்ளது.



# காடுகளான தேயிலை தோட்டங்கள் உயிர் அச்சத்தில் மக்கள்

மருதன் ராம்

200 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட மலையக பெருந்தோட்ட மக்களால் உருவாக்கப்பட்ட தேயிலை தோட்டங்கள் இன்று உரிய பராமரிப்புகள் இன்றி காடுகளாகும் போக்கு அதிகரித்துள்ளது. தற்போது பெரும்பாலான தோட்டங்களில் போதிய பராமரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லை என்று தொழிலாளர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். இதன் காரணமாக பெருந் தோட்டங்களில் தேயிலை விளைச்சல் குறைந்துள்ளதுடன், தொழிலாளர்களால் பாதுகாப்பாக தோட்டங்களில் பணிபுரிய முடி யாத நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது. ஆரம்ப காலங்களில் தோட்டங்களை பராமரிப்பதற்கு விசேட அவதானம் செலுத்தப்பட்ட போதிலும் தற்போது அந்த நிலை தலைகீழாக மாற்றமடைந்துள்ளது.



சில காலங்களுக்கு முன்புவரை பெருந் தோட்ட நிறுவனங்கள் தோட்டங்களை சிறந்த முறையில் பராமரித்து வந்தன. அதே நேரம் அரசாங்க நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் கவனிப்பாரற்ற நிலையில் காடுகளாகக் காட்சியளித்தன. ஆனால், தற்போது பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான தோட்டங்களும், அரசுக்கு சொந்தமான தோட்டங்களும் ஒரே மாதிரியாக காடுகளாகக் காட்சியளிக்கின்றன. இது தொழிற்துறை அழிவின் வெளிப்பாடாகவே கருதப்படுகிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. மறுபுறம் தேயிலை தோட்டத் தொழிற்துறை படிப்படியாக கைவிடப்படுகின்றதா? என்ற கேள்வியும் எழுகிறது. எது எவ்வாறாயினும் இதன் நேரடி தாக்கம் பெருந்தோட்ட மக்களை சென்றடைகிறது. இலாபம் ஈட்டும் போது அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் தோட்ட கம்பனிகள் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு தீர்வுகளை வழங்குவதில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் களைநாசினி அறிமுகமாகும் வரை முற்றுமுழுதாக தொழிலாளர்களைக் கொண்டே புற்கள் வெட்டி அகற்றப்பட்டு தேயிலை தோட்டங்கள் பராமரிக்கப்பட்டன. நாளாந்த சம்பளத்துக்காக மட்டுமன்றி குத்தகை முறையிலும் இந்த தொழிலுக்கு தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டனர். அத்துடன் தாங்கள் பணியாற்றும் தேயிலை தோட்டங்களை உரிய முறையில் பராமரிக்க வேண்டும் என்ற எண்ணம் தொழிலாளர் மத்தியில் காணப்பட்டது. அந்தக்காலத்தில் பெருந்தோட்டங்கள் சுத்தமாகவும் அழகாகவும் மட்டுமன்றி அதிகளவில் தேயி லைச் கொழுந்து அறுவடையைத் தரக் கூடியதாகவும் இருந்தன. அத்துடன் கிருமி நாசினி பயன்படுத்தப்படாத, இரசாயனம் கலக்காத தேயிலையைப் பெறக் கூடியதாக இருந்தது. இது இலங்கையின் 'சிலோன் டீ' என்ற நாமத்தை உலகறியவும் செய்தது.





பின்னர் புற்களை அழிப்பதற்காக பல வேறு வகையான இரசாயனங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டன. அதனால் பெருந்தோட்டங்கள் சுத்தமாக, புற்கள் வளரா மல் இருந்தன. தொழிலாளர்கள் ஓரளவு பாதுகாப்புடன் தொழில் புரிந்து வந்தனர். அத்துடன் பெருந்தோட்டப் பயிர்களுக்கு போடப்படும் உரங்கள் நேரடியாக பயிர்களுக்கே கிடைக்கக் கூடியவையாக இருந்தன.

பின்னரான காலப்பகுதியில் பெருந்தோட்டங்களில் புற்களை ஒழிப்பதற்கு களைகொல்லி இரசாயனங்களை பயன்படுத்து வதற்கு தடை விதிக்கப்பட்டது. இரசாயனங்களை பயன் படுத்தாத தேயிலைச் செய்கையும் சில தோட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் படி, புற்களை அகற்றுவதற்காக அதிக தொழிலாளர்களை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதுடன், பெருந்தொகை பணத்தையும் பெருந்தோட்டக் கம்பனிகள் செலவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆனால் பெரும்பாலான தோட்டக் கம்பனிகள் அவ்வாறு செய்யவில்லை. பல தேயிலை தோட்டங்கள் தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தி முன்னணியில் இருந்தது. தற்போது 25% தேயிலை உற்பத்திகள் பெருந்தோட்டங்களிலும், 75% தேயிலை உற்பத்திகள் சிறுதோட்டங்களிலும் பதிவாகின்றன. மறுபுறம் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவதும் இதற்கு முக்கிய காரணமாக உள்ளது. தேயிலைகள் அழிந்து தோட்டங்கள் காடுகளாக தோற்றமளிக்கின்றன. பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, மாத்தளை, களுத்துறை, மாத்தறை மாவட்டங்களில் மட்டுமின்றி நுவரெலியா மாவட்டத்திலும் கூட இந்த மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது.



எல்லாவற்றுக்கும் மேலாக, தேயிலை பெருந்தோட்டத் தொழிலையே நம்பியிருக்கும் இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வாதாரம் முற்றாக அழிந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது. இதனைப் பற்றி பெருந்தோட்டத் துறை சார்ந்த மக்கள் பெரும் விசனம் தெரிவித்து வருகின்றனர். இதனிடையே சில பெருந்தோட்டத் துறை தொழிற்சங்கத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் இன்னும் சில ஆண்டுகளில் பெருந்தோட்டத் துறை, குறிப்பாக தேயிலைச்செய்கைமுற்றாகஅழிந்துபோய்விடும் என்று பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறான பேச்சுக்கள் தேயிலையை மட்டுமே நம்பியிருக்கும் தொழிலாளர்களிடையே அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி வருகின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகக் கூறிக்கொள்ளும் தரப்பினர், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மனிதாபிமான செயற்பாடாகத் தெரியவில்லை.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதனம் குறித்து தொடர்ச்சியாக கருத்தாடல்கள் இடம்பெறுகின்ற போதிலும் அவர்களின் தொழில் பாதுகாப்பு தொடர்பில் அதிகளவில் பேசப்படுவதில்லை.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



வேல்ஸில் இருந்து அருஸ்

# ஒரு மரணம் ஒரு சோகம், ஒரு மில்லியன் இறப்புகள் ஒரு புள்ளிவிவரம்

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது அல்லது அதன் செலவுகளை ஐரோப்பாவின் தலையில் கட்டிவிடுவது என்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் மாற்றத்திற்கான காரணம் என்ன? கடந்த வாரம் அலாஸ்காவுக்கு சென்றிருந்த ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீனை ட்றம்ப் ஏன் செங்கம்பளம் விரிந்து வரவேற்றார் என்ற கேள்விகள் எழுந்திருந்தன.



அதற்கா காரணம் நேட்டோ கூட்டமைப்பினால் போரை வெல்ல முடியாது என்ற முடிவுக்கு அமெரிக்கா வந்துவிட்டதற்கான அறிகுறியாகும். அதனை அமெரிக்காவின் துணை அதிபர் ஜே.டி வான்ஸ் முன்னர் கூறியும் இருக்கின்றார். அதாவது உக்ரைன் படையினரால் இந்த போரில் வெற்றியீட்ட முடியாது என வான்ஸ் தெரிவித் திருந்தார்.

அமெரிக்காவின் இந்த முடிவை உறுதிப்படுத்துவது போலவே உக்ரைன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்டெம் டிமிட்ரூக்கின் கருத்தும் வெளிவந்துள்ளது. அதாவது 2022 முதல் கியேவின் 17 இலட்சம் படையினர் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளனர் என்பதைக் கசிந்த இராணுவ ஆவணங்கள் உறுதிப்படுத்தியுள்ளன என டிமிட்ரக் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை(20) உக்ரைனின் தலைமைத் தளபதியிடமிருந்து சைபர் தாக்குதல் குழுக்களால் (Russian hacking groups) கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் டிஜிட்டல் அட்டை குறியீட்டை மேற்கோள் காட்டி, இறந்த அல்லது காணாமல் போன வீரர்களின் பெயர்கள், அவர்களின் இறப்பு விவரங்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தனிப்பட்ட தரவுகள் ஆகியவற்றை ரஷ்ய ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.



ரஸ்யாவின் *Killnet, Palach Pro, User Sec, Beregini* ஆகிய குழுக்கள் ரெறாபைற் அளவிலான தகவல்களை உக்ரைன் படை தலைமையகத்தில் இருந்து திருடியுள்ளனர். அதில் உக்ரைன் படையினரின் இழப்புகள், அவர்களின் சிறப்பு படைநடைவடிக்கைகுழுக்கள், பிரதானபுலனாய்வு கட்டளை மையத்தின் தரவுகள், ஆயுதங்களை விநியோகம் செய்த நாடுகளின் தரவுகள், 2022 - 2025 வரையில் வழங்கப்பட்ட ஆயுதங்களின் தரவுகள் உட்பட பெருமளவான தகவல்கள் அடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தகவல்களின் அடிப்படையில் 2022 இல் 118,500 துருப்புகள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயினர், 2023 இல் 405,400, 2024 இல் 595,000 மற்றும் இந்த ஆண்டு இதுவரை 621,000 துருப்புக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயினர் என்று உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது இதுவரையில் 1,721,000 துருப்புக்கள் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளனர்.



“காணாமல் போனவர்களின் பட்டியலில் இன்று ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் உள்ளனர், நிச்சயமாக இந்த படையினர் இறந்து விட்டார்கள், அதே நேரத்தில் அவர்களின் குடும்பங்கள் அதனை அறியாது உள்ளனர். நிலைமை சோகமானது, நிலைமை எம்மை பயமுறுத்துகிறது” கிராமங்களில் முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண்கள் மட்டுமே உள்ளனர். உக்ரைன் “பெரும் இழப்புகளை” மற்றும் “மக்கள்தொகை நெருக்கடியை” எதிர்கொண்டுள்ளதாகவும், நாங்கள் பல தலைமுறைகளை இழந்துவிட்டோம் என்றும் டிமிட்ரக் தெரிவித்துள்ளார்.

ஆனால் கடந்த பிப்ரவரியில், உக்ரைனின் அதிபர் விளாடிமிர் ஜெலென்ஸ்கி CBS செய்தியிடம் 2022 முதல் தனது வீரர்கள் 46,000 பேர் கொல்லப்பட்டதாகவும், சுமார் 380,000 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்திருந்தார். எனினும் உக்ரைனின் இந்த தகவலை பல மேற்குல ஊடகங்கள் கூட நம்பவில்லை. பிரான்ஸின் Le Monde என்ற ஊடகம் இழப்புக்கள் செலன்ஸ்கி கூறுவதை விட மிக மிக அதிகம் என தெரிவித்திருந்தது.

ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் கடந்த பெப்ரவரி மாதம் வரையிலும் 1.08 மில்லியன் படையினர் கொல்லப்பட்டதாகவும், காயமடைந்ததாகவும் தெரிவித்திருந்தது. அமெரிக்காவின் படைத்துறை புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் 1.8 மில்லியன் உக்ரைன் படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரியான கேணல் மக் கிரகோர் தெரிவித்துள்ளார்.



1.7 மில்லியன் படையினர் இறந்தது அல்லது காணாமல் போனது உறுதிப்படுத்தப் பட்டதால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 3 தொடக்கம் 4 மில்லியன் வரையில் இருக்கலாம். பிரித்தானியாவின் மொத்த படையினரின் எண்ணிக்கை ஏறத்தாழ 147,000 ஆகும். அமெரிக்காவின் மொத்த படையினரின் எண்ணிக்கை ஏறத்தாழ 2.07 மில்லியன் ஆகும். அதாவது உக்ரைனின் படையினரின் இழப்புக்களை பார்க்கும் போது போர் ஒன்று ஏற்பட்டால் 3 வருடத்தில் அமெரிக்க படையினர் அனைவரும் கொல்லப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



சுருக்கமாக கூறினால் அமெரிக்க படையினர் ரஸ்ய இராணுவத்தை 3 வருடங்கள் எதிர் கொள்வதே கடினமான விடயம். அதேபோல் பிரான்ஸ் படையினரின் எண்ணிக்கை 270,000 மற்றும் ஜேர்மன் படையினரின் எண்ணிக்கை 180,000 ஆகும், அதாவது மேற்கு ஐரோப்பாவின் மிக முக்கிய முன்னனி நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் படையினரை ஒன்று சேர்த்தாலும் இரண்டு வருடங்கள் கூட

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## ஒரு மரணம் ... தொடர்ச்சி ...

போரில் தாக்குப்பிடிப்பார்களா என்பது கேள்விக் குறியானதே.

1955 ஆம் ஆண்டு பிரான்ஸின் காலனித்துவத்துடன் ஆரம்பமாகி 1975 ஆம் ஆண்டு நிறைவுபெற்ற வியட்நாம் போரில் 58,000 அமெரிக்க படையினர் 19 வருடங்களில் கொல்லப் பட்டிருந்தனர். ஆனால் தற்போது 3 வருடங்கள் 5 மாதங்களில் கொல்லப்பட்ட உக்ரைன் படையினரின் எண்ணிக்கை வியட்னாம் போருடன் ஒப்பிடும் போது ஏறத்தாழ 30 மடங்கு அதிகம்.

இந்த இழப்புக்களுக்கு காரணம், நவீன ஆயுதங்கள், செய்மதிகள், ரடார்கள், தொழில் நுட்பங்கள் மற்றும் போரியல் வியூகங்கள் ஆகும். அதேசமயம் ரஸ்யாவும் தனது இழப்புக்களை இதுவரையில் வெளியிடவில்லை. இருந்தபோதும் ரஸ்ய படையினரின் இழப்புக்கள் ஏறத்தாழ 130,000 இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இழப்புக்களை சில படைத்துறை ஆய்வாளர்கள் இரு தரப்பினரும் பரிமாறும் இறந்த உடல்களின் எண்ணிக்கைகளை கொண்டு கணிப்பிடுகின்றனர். கடந்த ஜனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையிலும் ரஸ்யா 10,301 உடலங்களை கையளித்துள்ளது. அதேகாலப் பகுதியில் உக்ரைன் 290 ரஸ்ய படையினரின் உடலங்களை கையளித்துள்ளது. மேலும் தம்மிடம் 40,000 இற்கு மேற்பட்ட உக்ரைன் படையினரின் உடல்கள் இருப்பதாக ரஸ்யா தெரிவித்துள்ளபோதும் உக்ரைன் அதனை வாங்க மறுத்து வருகின்றது.

படையினர் இறந்ததாக அறிவித்தால் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும், ஆனால் காணாமல்போனதாக அறிவித்தால் உடனடியாக இழப்பீடுகள் வழங்கத் தேவையில்லை. ஏற்கனவே பொருளாதாரத்தினால் வீழ்ந்துள்ள உக்ரைனுக்கு இழப்பீடுகள் வழங்க நிதி இல்லை. எனவே தான் உடல்களை வாங்க மறுத்து வருகின்றது. இதனிடையே கடந்த 3 வருடங்களில் உக்ரைன் படையில் இருந்து 600,000 இற்கு மேற்பட்டவர்கள் தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் பெருமளவானவர்கள் பலவந்தமாக சேர்க்கப்பட்டவர்கள்.

மேலும் போரிட மறுத்த 7 மில்லியன் உக்ரைன் மக்கள் நாட்டை விட்டும் வெளியேறியுள்ளனர். அதில் 3 மில்லியன் மக்கள் ஐரோப்பாவிலும், 3 மில்லியன் மக்கள் ரஸ்யாவிலும் தங்கியுள்ளனர். ரஸ்யாவில் மொத்தமாக வாழும் உக்ரைன் மக்களின் எண்ணிக்கை 10 மில்லியன்களாகும்.

2014 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி உக்ரைனில் 45 மில்லியன் வாழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றர். ஆனால் போர் ஆரம்பமாகியபோது 37 மில்லியன் மக்களே இருந்துள்ளனர். தற்போது அது ஏறத்தாழ 20 மில்லியனாக குறைந்துள்ளது. அதிலும் போரிடும் வயதுடையவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. எனவே தான் கட்டாய படை சேவை வயதினை உக்ரைன் 16 முதல் 60 ஆக அறிவித்துள்ளது. ஆனால் ஒவ்வொரு மாதமும் 20,000 இளம் வயது ஆண்கள் உக்ரைனை விட்டு தப்பியோடிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் 621,000 படையினர் இறந்தது என்றால் இந்த வருடத்தின் முடிவில் அது ஒரு மில்லியனை எட்டிவிடும். இவ்வளவு இழப்பு ஒரு சோகம் - எதற்காக? ஸ்டாலின் ஒருமுறை சொன்னது போல, ‘ஒரு மரணம் ஒரு சோகம். ஒரு மில்லியன் இறப்புகள் ஒரு புள்ளிவிவரம்’ (One death is a tragedy. A million deaths are a statistic). 2014 இல் தொடங்கிய போரிலிருந்து உக்ரைன் என்ன பெற்றது? ஊழலில் மிக உயர்ந்த நாடாக மாறியதை தவிர வேறு எதுவும் இல்லை. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு, முதல் 1,000 இறப்புகளுக்குப் பிறகு அது இனி ஒரு பொருட்டல்ல என்பதே இங்கு யதார்த்தம்.

• • •







## இறால்களை ... தொடர்ச்சி ...

சீசியம்-137 என்ற கதிரியக்க இர சாயனப் பொருள் இருப்பதை FDA கண்டறிந்துள்ளது.

“நீங்கள் சமீபத்தில் வால் மார்ட்டிலிருந்து பாதிக்கப்பட்ட கிரேட் வேல்யூ மூல உறைந்த இறாலில் ஒன்றை வாங்கியிருந் தால், அதை தூக்கி எறியுங்கள். இந்த தயாரிப்பை சாப்பிடவோ அல்லது பரிமாறவோ வேண்டாம்,” என்று FDA செவ்வாயன்று (19) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. “விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் இந்த தயாரிப்பை அப்புறப்படுத்த வேண்டும், மேலும் இந்த தயாரிப்பை விற்கவோ அல்லது பரிமாறவோ கூடாது” என அது தெரிவித்துள்ளது.

லாஸ் ஏஞ்சலஸ், ஹூஸ்டன், சவன்னா மற்றும் மியாமியில் உள்ள துறைமுகங்களில் உள்ள கப்பல் கொள்கலன்களில் சீசியம்-137 இருப்பதைக் கண்டறிந்த பிறகு சுங்க அதிகாரிகள் முதலில் இந்த பிரச்சினையை வெளிக்கொண்டு வந்திருந்தனர். பரிசோதனை செய்யப்பட்ட இறாலின் குறைந்தது ஒரு மாதிரியாவது சீசியம்-137 இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது. ஏஜென்சியின் பெறப்பட்ட அனுமதிக்கப்பட்ட அளவை விட அளவுகள் குறைவாக இருந்த போதிலும், சந்தேகத்திற்குரிய அனைத்து ஏற்றுமதிகளுக்கும் அது அனுமதி மறுத்ததுள்ளது.

சீசியம்-137 என்பது அணுக்கரு பிளவு மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒரு கதிரியக்க இரசாயனப் பொருள், இது டிஎன்ஏவை சேதப் படுத்தும் மற்றும் உட்கொண்டால் புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கும்.

## மூன்று வருட ... தொடர்ச்சி ...

கடந்த புதன்கிழமை(20) உக்ரைனின் தலைமைத் தளபதியிடமிருந்து ஹேக்கர் குழுக்களால் பெறப்பட்டதாகக் கூறப்படும் டிஜிட்டல் அட்டை குறியீட்டை மேற்கோள் காட்டி, இறந்த அல்லது காணாமல் போன வீரர்களின் பெயர்கள், அவர்களின் இறப்பு விவரங்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தனிப்பட்ட தரவுகள் ஆகியவற்றை ரஷ்ய ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

2022 இல் 118,500 துருப்புக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயினர், 2023 இல் 405,400, 2024 இல் 595,000 மற்றும் இந்த ஆண்டு இதுவரை 621,000 துருப்புக்கள் கொல்லப்பட்டனர்அல்லது காணாமல் போயினர் என்று உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

“காணாமல் போனவர்களின் பட்டியலில் இன்று ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் உள்ளனர், நிச்சயமாக இந்த படையினர் இறந்துவிட்டார்கள், அதே நேரத்தில் அவர்களின் குடும்பங்கள் அதனை அறியாது உள்ளனர். நிலைமை சோகமானது, நிலைமை எம்மை பயமுறுத்துகிறது” கிராமங்களில் முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண்கள் மட்டுமே உள்ளனர். உக்ரைன் “பெரும் இழப்புகளை” மற்றும் “மக்கள்தொகை நெருக்கடியை” எதிர்கொண்டுள்ளதாகவும். நாங்கள் பல தலைமுறைகளை இழந்துவிட்டோம் என்று டிமிட்ரக் தெரிவித்துள்ளார்.

அறிக்கையிடப்பட்ட புள்ளிவிவரங்கள் அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளை விட மிக அதிகம். பிப்ரவரியில், உக்ரைனின் விளாடிமிர் ஜெலென்ஸ்கி CBS செய்தியிடம் 2022 முதல் தனது வீரர்கள் 46,000 பேர் கொல்லப்பட்டதாகவும், சுமார் 380,000 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

**காடுகளான . . . தொடர்ச்சி . . .**

## அண்மைய போக்கு

பெருந்தோட்டங்கள் காடுகளாக மாறுவதால், பெருந்தோட்ட தொழிலாளர்கள் மாத்திரமின்றி பெருந்தோட்டங்களில் வசிக்கும் மக்களும் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. குளவி, சிறுத்தை, பாம்பு, காட்டெருமை, யானை உள்ளிட்ட விலங்குக ளின் அச்சத்துடனேயே அந்த மக்களின் வாழ்க்கை கடந்து செல்கிறது. குறிப்பாக அண்மைய நாட்களில் மலையக பகுதிகளில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளது. பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட பலரும் குளவி கொட்டுக்கு இலக்காகும் சம்பவங்கள் நாளாந்தம் பதிவாகி வருகின்றன.

பெருந்தோட்டங்களில் உள்ள வீடுகளை அண்டிய பகுதிகளில் சிறுத்தைகளின் நட மாட்டம் அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த சில தினங்களாக நுவரெலியா மாவட்டத் தின் நோர்வூட், போடைஸ், கினிகத் ஹேன, பொகவந்தலாவ உள்ளிட்ட பகுதிகளில் சிறுத் தைகளின் நடமாட்டம் பதிவாகியுள்ளது. சில பகுதிகளில் வீடுகளில் வளர்க்கப் படும் செல்லப் பிராணிகளை சிறுத்தைகள் வேட்டை யாடும் சம் பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த அரசாங்கம், பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்கு நட வடிக்கை எடுக்கப்படுவதாக கூறியுள்ளது. இந்த பிரச்சினை தொடர்பில் கருத்துரைத்த பெருந் தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச் சர் சமந்த வித்யாரத்ன, “வனஜீவராசிகள் திணைக் களத்துடன் கலந்துரையாடி இதற்கான தீர்வு எட்டப்படும்” என்று தெரிவித்தார்.

மறுபுறம் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நுவரெலியா மாவட்டத்துக்கு பொறுப்பாக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர கூறுகையில், “சிறுத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக் களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. குறிப்பாக கினிகத்ஹேன உள் ளிட்ட சில நகரங்களை அண்டிய குடியிருப்பு பகுதிகளிலும் சிறுத்தைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளில் சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. ஒரு புறம் சிறுத்தைகளை கொல்ல முடியாது என்பதுடன் மறுபுறம் மக்களின் உயிரையும் பாதுகாக்க வேண்டும். எனவே, இது மிகுந்த அவதானத்துடன் கையாள வேண்டிய பிரச் சினை” என்றார்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்தவும், தோட்ட ங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய வும், நில உரிமை, வீட்டு வசதி போன்ற அடிப் படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நட வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கைவி டப்பட்ட தோட்டங்களை புனரமைக்கவும், விவசாயம் மற்றும் இதர தொழில்களில் ஈடு படவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பயிற்சி மற்றும் நிதியுதவி வழங்கப்பட வேண்டும். மேலும், தோட்டப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த நிலைமைக்கு தீர்வு காணாவிட்டால், மலையகத்தின் வளங்கள் குறைந்து, சுற்றுச்சூழல் சீரழிந்து, தொழிலாளர்களின் வாழ்க்கை மேலும் மோசமாகும் அபாயம் உள்ளது.

• • •

**முன்னாள் ஜனாதிபதி. . . தொடர்ச்சி . . .**

ராஃப்டர், லண்டனில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் மூலம் முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது மனைவி க்கு அதிகாரப்பூர்வமாக அழைப்பிதழ் வழங்கியிருந்தார்.

இருப்பினும், முன்னாள் ஜனாதிபதி சம்பந் தப்பட்ட சுற்றுப்பயணத்தின் போது அரசாங்க நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறி ஒரு நபர் சமீபத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி, விசாரணை தொடங்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் விக்ரமசிங்கவின் தனிப் பட்ட உதவியாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரி டமிருந்து சமீபத்தில் அந்தத் திணைக்களம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தது.

அதைத் தொடர்ந்து, விக்ரமசிங்கவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகு மாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி, அவர் காலை 9.00 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரா னார்.

சுமார் 4 மணி நேரம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி பிற்பகல் 1.15 மணியளவில் கைது செய்யப்பட் டார்.

பின்னர் அவர் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் மேற்கொள் ளப்பட்டன.

முறைப்பாட்டாளர் தரப்பு சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் விளக்கமளித்தார்.வி.எஸ். கருணாரத்ன என்ற நபர் 17.03.2025 அன்று ஜனாதிபதியிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் உள்ளக விசாரணை நடத்தப்பட்ட தாகவும், பின்னர் 23.05.2025 அன்று ஜனாதிபதியின் செயலாளரால் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக இருந்த காலத்தில், 13.09.2023 முதல் 20.09.2023 வரை கியூபா மற்றும் அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பின்னர், 22 மற்றும் 23.09.2023 ஆகிய திகதிகளில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்வதாகக் கூறி தனிப்பட்ட பயணத்தில் ஈடுபட்டதன் மூலம் அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தொடர்புடைய சம்பவம் தொடர்பாக 33 சாட்சிகளிடம் வாக்குமூலங்க ளைப் பதிவு செய்த பின்னர், நாட்டின் 8வது நிறைவேற்று ஜனாதிபதியான ரணில் விக்ரம சிங்கவை சந்தேக நபராகப் பெயரிட்டு கைது செய்ததாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றில் தெரிவித்தார்.

நீண்ட விசாரணைகளின் போது அரசாங்க தரப்பு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக ரணிலுக்கான பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பயங்கரவாத . . . தொடர்ச்சி . . .**

பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவ தில்லை.

திட்டமிடப்பட்ட குற்றக் குழுக்களின் உறுப்பினர்களையும், பாதாள உலகக் குழு உறுப் பினர்களையும் கைது செய்வதற்கு குறித்த சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

எவ்வாறாயினும் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தற்போது நிலவும் குறைப் பாடுகளை நிவர்த்தி செய்து உண்மை மற் றும் நல்லிணக்க ஆணைக்குழுவை செயற் படுத்து வதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையையும் தங்களது தரப்பு 2009ஆம் ஆண்டே முன்வைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற் றும் நட்டஈட்டு அலுவலகம் என்பன கடந்த காலங்களை போலின்றி எதிர்காலத்தில் வலுப் படுத்தப்படும்.

அதேநேரம் காணாமல் போனவர்கள் தொடர்பான செயற்பாடுகளை வலுப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். செம்மணி மனிதப் புதைகுழி உட்பட மனித எலும்புக் கூடுகள் மீட்கப்படும் சகல மனித புதைகுழிகள் தொடர்பிலும் பக்க சார்பின்றி விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவற்றுக்கு அவசியமான நிதி மற்றும் மனித வளங்கள் அரசாங்கத்தினால் வழங்கப் படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோன்று பிரிவினைவாத குழுக்களின் சின்னங்கள் மற்றும் அவை சார்ந்த வாசகங்கள் இன்றி உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் தேசிய ஒருமைப் பாட்டுக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, அனைவரும் ஒன்றிணைந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரி வித்துள்ளார்.



## விளை நில ... தொடர்ச்சி ...

விவசாயிகளுக்கு விழிப்புணர்வுகள் என பல நிகழ்வுகளை, தேசிய மக்கள் சக்தியின் திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கம்யூனிட்டி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய வர்கள் இணைந்து குறித்த பகுதியில் அமுல்படுத் தியுள்ளனர்.

இது குறித்து ஒரு விவசாய குடும்பப் பெண்மணி தெரிவிக்கையில், "விவசாய நிலத்தை மீட்கவும் எங்கள் உரிமைகளைப் பெறவுமே போராடினோம். அண்மையில் போராட்டம் காரண மாகக் காவல்துறையினர் என்னைத் தூக்கி வாகனத் துக்குக் கீழே வீசினார்கள். இதனால் கடந்த மூன்று நாட்களாகக் கையைத் தூக்க முடியாத அளவுக்கு உடல், உள ரீதியான பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளேன். இக் காணிப் பிரச்சினையைத் தீர்த்துத் தருவதாக வாக்குறுதியளித்ததால் தான் அவர்களுக்கு வாக்குப் போட்டோம். ஆனால் காணியை அபகரித்துள்ளனர். எனவே எங்கள் காணிகளை எங்களுக்குப் பெற்றுத் தாருங்கள்" என்றார்.

குறித்த இத் தர்பார், திருகோணமலை மாவட்ட செயலகம் முன்னால் நடைபெற்ற போராட்டத்தின் போது காவல்துறையினரின் தாக்குதலுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட நிலையில் இக் கருத்தினை பிரத்தியேகமாக வழங்கியுள்ளார்.

இலங்கையில் விவசாய செய்கை ஊக்கு விக்கப்பட வேண்டும் என்ற நிலையில், அரசாங் கம் பல மானிய திட்டங்களை வழங்கியுள்ள போதிலும், குறித்த பகுதி விவசாயிகள் மட்டுமே இந்த இழிவு நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள அனுர குமார அரசாங்கம் தேர்தல் காலங்களில் பல வாக்குறுதி களை வழங்கியுள்ளது. ஆனால் விவசாய பூமியை இவ்வாறு கபளீகரம் செய்து நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது நியாயமானதல்ல.

குறிப்பாக முத்துநகர் பகுதியில் 350க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ள நிலையில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவர்களுடன் இணைந்து மக்கள் போராட்ட முன்னனியைச் சேர்ந்த வசந்த முதலிகே உட்பட பலரும் குரல் கொடுத்து வருகின்றனர்.

விவசாய விளை நிலத்தை உரிய மக்களுக்கு வழங்க, ஆளும் அரசாங்கம் ஆக்கபூர்வமான நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

• • •

## ஜநாவை ... தொடர்ச்சி ...

முழுமையாக பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப் படும் என எதிர்பார்க்க முடியாது.

அதற்கு மாற்றீடாக வேறு சட்டத்திருத்தம் அவசரமாக பாராளுமன்ற அமர்வை கூட்டி நிறைவேற்றலாம். அல்லது ஜநா அமர்வில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டுள்ளது என காட்ட இப்படியான அவசர செய்திகளை வெளியிடலாம் என்பதே உண்மை.

ஏனெனில் கடந்த 2012ல் இருந்து சர்வ தேச நாடுகள் ஐநா மனித உரிமைப்பேரவை சர்வதேச இராஜ தந்திரிகளும் என பலரைம் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரி, ரணில், கோட்டபாய, தற்போதைய அநுர வரை யும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கூறிவந்த போதும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இது இருந்தது.

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க கடந்த 2024 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திலும், தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பல வாக்குறுதிகளில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என கூறினார். அதன்பின்னர் பொதுத்தேர்தல் பிரசாரத்திலும் இது வலியுறுத்த தவறவில்லை இப்போது ஒன்பது மாதம் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

உண்மையில் 1979ல் பயங்கரவாத தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 2010 வரை மிக அதிக எண்ணிக்கையில் சித்திரவதைப் பட்டு கொலை செய்யப்பட்டு சிறைகளில் வருடக்கணக்காக தடுத்து வைக்கப்பட்ட ஒரே இனம் என்றால் அது தமிழர்கள் தான்.

ஆனால் இப்போதுதான் பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கத்தில் கடந்த காலங்களில் ஆட்சி யில் அமைச்சர்களாக, முதலமைச்சர்களாக, பிரதி அமைச்சர்களாக, அதிகாரிகளாக ஏன் ஜனாதிபதிகளாக இருந்தவர்களுக்கும் இந்த கொடிய சட்டம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சிங்கள மக்களுக்கும் இந்த சட்டம் இப் போது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஒட்டு மொத்த இலங்கையரும் இந்த சட்டத்தை இரத்து செய்வதற்கு அல்லது மாற்றீடாக வேறு சட்டங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வாய்புகள் மிக குறைவு.

இன்னும் சொல்வதானால் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுவதால் முதல் மகிழ்ச்சியடைவது யார் என்றால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய குடும்பமும் என்பதில் மாற்றுக்கருத்துகள் இருக்க வாய்பில்லை

## ஐ.சி.சி நீதிபதிகள் . .. தொடர்ச்சி ...

மாகக் கொண்ட நீதிமன்றத்தின் விசாரணையை அங்கீகரித்ததற்காக நீதிபதி கிம்பர்லி புரோஸ்ட் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காசாவில் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் ஆகியோருக்கு கைது உத்தரவுகளை பிறப்பித்ததற்காக நீதிபதி நிக்கோலஸ் யான் கில்லூவுக்கு அனுமதி வழங் கப்பட்டது. கூடுதலாக, பிடியாணைகளை கொண்டுவந்ததற்காக துணை வழக்கறிஞர்கள் நஜாத் ஷமீம் கான் மற்றும் மேம் மண்டியாயே நியாங் ஆகியோர் கருப்புப் பட்டியலில் சேர்க் கப்பட்டுள்ளர். அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ ஐசிசியின் அங்கந்துவ நாடுகள் கிடையாது.

"அனைத்து பிராந்தியங்களிலிருந்தும் 125 உறுப்பு நாடுகளின் ஆணையின் கீழ் செயல்படும் ஒரு பாரபட்சமற்ற நீதித்துறை நிறுவனத்தின் சுதந்திரத்திற்கு எதிரான ஒரு அப்பட்டமான தாக்குதல் இது" என தெரிவித்துள்ள ஐ.சி.சி இந்த தடைகளை நிராகரித்துள்ளது.

அமெரிக்கஜனாதிபதி டொனால்ட்ட்றம்ப் பிப்ரவரியில் ஐ.சி.சி மீது தனது முதல் தடைகளை விதித்தார், நீதிமன்றம் "அமெரிக்காவை யும் நமது நெருங்கிய கூட்டாளியான இஸ் ரேலையும் குறிவைத்து சட்டவிரோதமான மற்றும் ஆதாரமற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டதாக" குற்றம் சாட்டியிருந்தார். அதே போல், நெதன்யாகுவும் பிடியாணைகளை கண்டித்து, ஆளும் கட்சியை "யூத-விரோதி" என்று தெரிவித்திருந்தார்.

2024 ஆம் ஆண்டில், ஐ.சி.சி நெதன்யாகு மற்றும் கேலன்ட்டை தேடப்படும் பட்டியலில் சேர்த்தது, 2023 முதல் 60,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட காசாவிற்கு மனிதாபிமான உதவியை இஸ்ரேல் மறுத்ததற்கான காரணங் களை கண்டறிந்த பின்னர் அது இந்த நடை வடிக்கையை மேற்கொண்டிருந்தது.

## தாயகத்தில் ... தொடர்ச்சி ...

"கடை திறக்கவில்லை" எனக் காட்டப்பட்டதும், சிலர் காலை 10 மணிக்கு பின்னர் திறந்த கடைகளை படம் எடுத்து "கடைகள் திறந்தன" எனக் காட்டப் பட்டதையும் அவதானிக்க முடிந்தது. இதுவும் ஏட்டிக்கு போட்டியான விளம்பரமாகவே காண முடிந்தது.

ஆனால் சில இடங்களில் பொதுச் சந்தைகள் அந்தந்த பிரதேச சபை தவிசாளர்களின் அழுத்தம் காரணமாக பூட்டப்பட்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றும் இல்லாத வகையில் இந்த கதவடைப்புக்கு ஊடகத்தில் ஆதரவாக அறிக்கை விட்டபோதும், அதனை முஸ்லிம் வர்த்தகர்கள் முழுமையாக செயல் வடிவில் கடைப்பிடிக்கவில்லை என்பதே உண்மை.

"போராட்ட வடிவங்கள் மாறலாம், ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவ தில்லை" என தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார். முழுநாள் ஹர்த்தாலை அரை நாள் ஹர்த்தாலாக மாற்றியதை "போராட்ட வடிவங்கள்" என யாராவது கூறி அவர்களே திருப்தியடைந்தாலும், இது ஹர்த்தால் போராட்டத்திற்கே கதவடைப்பு செய்த போராட்டமாகவே பார்க்க முடிகிறது. இனி ஹர்த்தால் என்ற பேச்சுக்கே வடகிழக்கில் இடமில்லை. அதனை கடந்த 18ம் திகதி அரை நாள் ஹர்த்தால் – அது ஒவ்வாமை என உறுதிப்படுத்தி விட்டது.

போராட்ட வடிவம் ஹர்த்தால் தவிர்ந்த தாகவே இடம்பெறுவதே வெற்றியளிக்கும்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்







